# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,865 — 1969 අගෝස්තු 1 වැනි සිකුරාදා — 1969.8.1

14,865 ம் இலக்கம் — 1969 ம் ஆண்டு ஒகத்து மாதம் 1 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 831 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | 850 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 841 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 842 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 849 | நானாவித அறிவித்தல்கள் .. .. | — |


### பதவிகள் — வெற்றிடம்

" இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

1. *படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. *கேள்விக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. *நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அத்தாட்சித்தி எய்த வேண்டும்.

4. *அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரிசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
பதில் அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1968 ம் ஆண்டு திசெம்பர் மீ 20 ந் உ.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள் ; அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சா வழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்சப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

No. AA. 69/X 2126/69.

## விவசாயத் திணைக்களம்

### பொறியியல் அதிகாரி பதவி

விவசாயத் திணைக்களத்திலுள்ள பொறியியல் அதிகாரி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, அ. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 1969.8.15

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 1969.8.22

**குறிப்பு :**

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும் அபேட்சகராக வரவிரும்புவர் அரசாங்க சேவையில் உள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகவும் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின். அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கின்றார்களா வென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன்பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச்சம்பள உரித்துடையதுமாகும். நியமனம் முதலில் 3 ஆண்டுகள் தகுதிகாண் முறையில் அமையும்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு : வருடம் ரூபா 5,160 தொடக்கம் ரூபா 8,400 வரை ரூபா 360 கொண்ட 9 வருடாந்த ஏற்றங்களும்.

4. **தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையர் என்பதற்கு திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல்நல முடையவராயும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) 15.8.1969 இல் 50 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிப்பவர்கள் இவ்வயதுக் கட்டுப்பாடு இல்லாது கவனத்துக்கு எடுக்கப்படுவர்) .

**ஒன்றில்**

1. (அ) சிரேஷ்ட தராதரப் பரீட்சையிலோ அல்லது அதற்கு சமமான பரீட்சையிலோ அல்லது கணிதவியல், பௌதிகவியல் ஆகியவற்றுடன் உயர்ந்த பரீட்சையிலோ சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட தொழிற்கூடம் ஒன்றில் 5 வருடகால தொழிற் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும் ;

(இ) இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியில் 3 வருட பொறியியல் என்ஜினியரிங் வகுப்பை வெற்றிகரமாக முடித்திருத்தல் வேண்டும் ;

(ஈ) 5 வருட தொழிற் பயிற்சிக்குப்பின் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல வேண்டும் ;

(உ) 2 ம் தர போர்மனக பதவியுயர்த்தப்பட முன்னர் 1 ம் தர கீழ் மேற்பார்வையாளராக கடமை பார்த்திருத்தல் வேண்டும் ;

(ஊ) 2 ம் தர பொறியியல் போர்மனக குறைந்தது 7 வருட அனுபவம் இருத்தல் வேண்டும் ;

(எ) பெற்றோல் டீசல் இயந்திரங்கள், மின்னியக்க இயந்திரங்கள் மின்னுற்பத்தி இயந்திரங்கள் மற்றும் அதனைச் சார்ந்த உபகரணங்கள் ஆகியவற்றை திருத்தல், பேணலில் அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும். பொருத்தலிலும் இயந்திர கூடத்திலும், வெப்ப உலோகங்களிலும் கொதிகல கூட வேலையிலும் அனுபவம் பெற்றிருத்தல் விரும்பத்தக்கது ;

**அல்லது**

2. (அ) கனிஷ்ட தராதரப் பரீட்சையில் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(ஆ) என்ஜினியரிங் தொழிற்கூடத்தில் தொழிற் பயிற்சியாளராக சேவையாற்றியிருப்பதோடு போர்மன் தர சேவையில் குறைந்தது 15 வருடம் சேவையாற்றியிருத்தல் வேண்டும்.

(இ) பொருத்தலிலும் இயந்திர கூடத்திலும், வெப்ப உலோகத்திலும், கொதிகல வேலை கூடத்திலும், பெற்றோல் டீசல் இயந்திரங்கள் மற்றும் அதனைச் சார்ந்த உபகரணங்கள் ஆகியவற்றை திருத்தல், பேணலிலும் குறைந்தது 15 வருட அனுபவம் இருத்தல் வேண்டும் ;

(ஈ) தன் பொறுப்பில் உள்ள வேலைகளை திருத்தலில் ஏற்படும் செலவினை மதிப்பிடுதலிலும், தொழிலாளரை வழிப்படுத்தலிலும், கட்டுப்படுத்தலிலும் அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும் ;

(உ) பொறியியல் இயந்திரங்களை திருத்தலிலும், பேணலிலும் போர்மனக குறைந்தது 5 வருட விசேட திறமை பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—(1) மின்சார உபகரணங்கள், படமெறி கருவிகள் மற்றும் அதனைச் சார்ந்த உபகரணங்கள் ஆகியவற்றில் அனுபவம் பெற்றிருத்தலோடு நாட்டு மொழியில் வேலை செய்யும் அறிவும் இருத்தல் மேலதிகமான தகைமைகளாக இரு சந்தர்ப்பங்களிலும் கருதப்படும்.

(2) மேற்காட்டிய தகைமைகள் எவ்வாறாக இருந்தபோதும் போர்மன் தரம் I இல் உள்ளவர்களுக்கும், போர்மன் தரம் I வும்/அல்லது II ல் உள்ளவர்கள் அரசாங்க திணைக்களத்தில் குறைந்தது 10 வருட சேவையாற்றியிருப்பின் விண்ணப்பித்தற்கு தகைமையுடையவராவர்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும் பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு**) சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.

(ஆ) பல்கலைக் கழகப் பட்டம் அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) கணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடம் இருந்து பெற்றதாய் இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமையும், அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு**.—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையினுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக்கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையினுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின் படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டி. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1.
1969 ம் ஆண்டு ஜூலை மீ 25 ந உ.

8–245/1—1.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,865—

---

இல. AA. 67/X.2127/69

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### மின்சார எந்திரவியல் I ந் தர விரிவுரையாளர் பதவி அல்லது இப் பதவிப்பயிற்சிக்கான புலமைப் பரிசில் அளித்தல்

"ஹாடி" சிரேட்ட தொழில் நுட்ப நிலையத்தில் மின்சார எந்திரவியல் I ந் தர விரிவுரையாளர் பதவிக்கு அல்லது இப்பதவிப் பயிற்சிக்கான புலமைப் பரிசில் அளித்தற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை த. பெ. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 1969.8.15.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 1969.8.22.

**குறிப்புகள்** (i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக் வர விருப்பவர் அரசாங்க சேவையினுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகி விட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப் படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனுலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவார்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினுல் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாஙக சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iii) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இல்ஙகை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடைவர்களாயிருக்கின்றுர்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப்பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேடகப்படுவார்கள். அத்தகைய மருத்துவச்சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுதற்கு உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுபவர் கைம்பெண் அனுதை இளைப்பாற்றுச் சம்பளத்துக்கு கட்டணம் செலுத்த வேண்டும். நியமதாரி முதற்கண் 3 வருட காலத்திற்கு தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.

3. **சம்பளமும் ஏனைய படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவைத் திட்டம் வருமாறு :—

ரூ. 8,880—480—ரூ. 13,200/– வருடாந்தம். (ரூ. 11,760/– பெறமுன் வினைத்திறமைகாண் தடை உண்டு. ரூ. 11,280/– இல் இரு வருடங்கள் தங்கல்).

5 ஆம் பந்தியில் இதன் தொடர்பாக குறிக்கப்பட்ட நியதிப்படி பயிற்சி பெற ஒருவர் தெரிவு செய்யப்படின் அவருக்கே அளிக்கப்பாலதான சம்பளமும் படியும் திறைசேரியுடன் உசாவிய பின்னரே தீர்மானிக்கப் படும்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1969 ம் ஆண்டு ஆகத்து மாதம் 15 ந் திகதியன்று 30 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

(இ) மின்சார எந்திரவியல் பாடங்களுடன், அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தில் 1 ம் அல்லது 2 ம் வகுப்புச் சிறப்புப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) மின்சார எந்திரவியலாளர் நிறுவனத்தின் கூட்டுறுப்பினர், தகைமை அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தில் மின்சார எந்திரவியலில் விஞ்ஞான முதுமானி அல்லது கலாநிதிப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(உ) ஒரு அரசினர் நிலையத்தில் அல்லது ஒரு கூட்டுத்தாபனத்தில் அல்லது ஒரு அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிலையத்தில் 5 வருட படிப்பித்தல் அனுபவமும் செயல்முறை அனுபவமும் அல்லது 5 வருட படிப்பித்தல் செயல்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(ஊ) சிங்களத்தில் படிப்பித்தற்கான ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். அல்லது 3 வருட காலத்துக்குள் சிங்களத் தேர்ச்சி பெறவேண்டும்.

5. **பயிற்சிக்கான புலமைப் பரிசில் அளித்தல் தொடர்பில் அமையும் விதிகளும் நிபந்தனைகளும்.**—(i) மேற்படி 4 ம் பந்தியில் கொடுபட்டுள்ள தகைமையுடையவர்கள் எவர்களிடமிருந்தாவது விண்ணப்பங்கள் வராவிடின், இப்பதவிக்கு தகுதியான விண்ணப்பதாரிகள் எவராவது இல்லாவிடின், பயிற்சியாளராக நியமனம் பெறுவதற்கு பின்னரும் தகைமைகளையுடையவரிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் சீர்தூக்கப்படும் :—

(அ) வயது 1969.8.15 அன்று 28 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (வயதெல்லை சகலருக்கும் ஏற்புடையதாகும்).

(ஆ) மின்சார எந்திரவியல் பாடங்களுடன், அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தில் 1 ம் அல்லது 2 ம் வகுப்புச் சிறப்புப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(இ) ஒரு அரசினர் நிலையத்தில் அல்லது ஒரு கூட்டுத்தாபனத்தில் அல்லது ஒரு அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிலையத்தில் 5 வருட படிப்பித்தல் அனுபவமும் செயல்முறை அனுபவமும் அல்லது 5 வருட படிப்பித்தல்/செயல்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்படுபவர் வெளிதேசத்தில் பயிற்சி பெறும்படி வேண்டப்படலாம். பயிற்சிக் காலத்தில் தகுதியான சகாயப்பணமளிக்கப் படும்.

(iii) தெரிவு செய்யப்பட்டவர் வெளி தேசத்தில் பயிற்சி பெற நேரிடின், அவர் இலங்கை அரசாங்கத்துடன் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும் :—

செய்வதாக உறுதிப்படுத்தும் பிறவற்றுள், குறித்த பயிற்சியை நம்பிக்கையுடனும் கெட்டித்தனமாகவும் செய்து, திருப்திகரமாகப் பயிற்சியை முடித்து, அதன் பின்னர் இலங்கை அரசாங்கம் விரும்பின் (அரசாங்கம் தீர்மானிக்கும்) குறித்த ஒரு காலத்துக்கு அதன் சேவையிலீடுபடுவதாகவும்,

உடன்படிக்கையின் விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக நடக்கத்தவறின் இலங்கை அரசாங்கத்துக்கு, இப் பயிற்சி முழுவதற்குமாக இலங்கை அரசாங்கத்தால் அல்லது புலமைப் பரிசில் வழங்கும் ஸ்தாபனத்தினுல் அல்லது இரண்டினுலும் செலவழிக்கப்பட்ட சகல செலவினங்களையும் (உதாரணமாக சம்பளம், சகாயப்பணங்கள், பிரயாணச் செலவு, பிற செலவுகள் ஆதியன) திருப்பிக் கொடுப்பதாக உறுதிப்படுத்துவதாகவும் உடன்படிக்கை செய்தல் வேண்டும்.

(iv) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் மின்சார எந்திரவியலாளர் நிறுவனத்தின் கூட்டுறுப்பினர் தகைமை அல்லது மின்சார எந்திரவியல் விஞ்ஞான முதுமானி அல்லது கலாநிதிப் பட்டம் பெறவேண்டும்.

6. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கென கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாய் இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு** (1) சாதனங்களையாயினும் , சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

9. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

8. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, ஏன முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

9. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

10. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் 'விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெருவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்கசேவை அதிகாரசபை.

அரசாங்கசேவை அதிகாரசபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1.
1969 ம் ஆண்டு ஜூலை மீ 25 ந உ.

8–245/2—1.8.69 ந் தேதிய வர்த்தமானி இல. 14,865

---

No. AA 52/X 2128/69.

## திட்ட அமைப்பு பொருளாதார அமைச்சு

### திட்ட அமுலாக்கும் பிரிவு

### உப அதிபதி பதவி (தொழில்நுட்பம்)

திட்ட அமைப்பு, பொருளாதார அமைச்சின் திட்ட அமுலாக்கும் பிரிவில் உப அதிபதி பதவிக்கான (தொழில்நுட்பம்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, கீழ்வரும் திகதியன்றோ அதற்கு முன்போ எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும் :—

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் :—1969.8.15.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் :—1969.8.22.

**குறிப்பு :**

(i) அச்சிட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடிதஉறையை தமது கடிதத்தோடு அனுப்புதல்வேண்டும். மேலும் அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையில் உள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவும் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் தபாலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச் சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்கும் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ் அபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டிற்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதி நிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற்கு தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணஞ் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேணடும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிமையுடையதுமாகும்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு :—ஆண்டொன்றுக்கு 13,800 ரூபாவிலிருந்து 600 ரூபா கொண்ட 4 வருட ஏற்றங்களால் ஆண்டொன்றுக்கு 16,200 ரூபா வரை செல்லும்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்:—

(அ) சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயுமிருத்தல் வேண்டும்.

(ஆ) 1969.8.15 அன்று 30 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல். (அரசாங்கத்தின் கீழ் நிரந்தரப் பதவிகள் வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு இந்த வயதெல்லை ஏற்புடைய தாகாது.)

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றின் பொறியியல் பட்டம் பெற்றவராகவும் A. M. I. C. E. உடையவராகவும் அல்லது சமமான அங்கீகரிக்கப்பட்ட உயர்தொழிற் தகைமையும்.

(ஈ) எட்டு வருடங்களுக்குக் குறையாத சிவில் எந்திரவியல் வேலை அனுபவமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு :**

திட்ட அபிவிருத்தி, நிகழ்ச்சித்திட்ட முகாமை தொழில் முறைகள் செயற்படுத்தல், அவதி நெறிவலை வேலைப்பாட்டுக் கொள்கை போன்றவற்றின் அறிவு ஒரு தகைமையாகக் கருதப்படும்.

5. அபேட்சகர் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும், காட்டுமாறு கேட்கும் பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு** :—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக்கழக பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச்சான்றிதழ்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழில்நுட்பத் தகைமையும்/ உயர் தொழிற்றகைமை அல்லது தொழில்நுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு :**

1. சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக் கூடாது.

2. சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்

படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, என முகவரியிட்டனுப்பவேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானயின் I ஆம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணபபப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது) அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்பட்டமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பகடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெருவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
25.7.1969.

8—245/3—1.8.69 ந தி திப வர்தமானி இல. 14,865

---

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### விவசாய வட்டார வித்தியாதிகாரி பதவிகள்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள விவசாய வட்டார வித்தியாதிகாரி பதவிகளுக்கு ஆண்களிடமிருந்தும் பெண்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய அச்சடிக்கப்பட்ட படிவங்களிலே தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள், 1969 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 21 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக " நிரந்தரக் காரியதரிசி (பொது நிர்வாகக் கிளை), கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

**குறிப்பு** (i) இப்பதவிக்கு விண்ணப்பம் செய்ய விரும்பும் ஒவ்வொருவரும் தான் ஆசிரியராகப் பதிவு செய்யப்பட்டுள்ள இலக்கம், பெற்றுள்ள பட்டம் பரீட்சைக்கான பாடங்கள், படிப்பித்தல் அனுபவம் ஆகிய விபரங்களைக் கொடுத்து உரிய படிவத்துக்கு, கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) எழுத்துமூலம் விண்ணப்பிக்க வேண்டும். படிவத்துக்கான விண்ணப்பங்கள் 1969 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 15 ஆந் திகதிவரை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். அத்தகைய விண்ணப்பங்கள் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பொ.நி. 25/8 என்ற இலக்கம் இடப்பட வேண்டும். விண்ணப்பத்துடன் சொந்த விலாசமிடப்பட்ட, முத்திரையொட்டப்படாத நீண்ட காகித உறை ஒன்றும் அனுப்பப்பட வேண்டும். நேரில் வரும் எவருக்கும் படிவம் வழங்கப்படமாட்டாது.

(ii) விண்ணப்பப் படிவமேனும் அது பற்றிய எக்கடிதமேனும் அஞ்சல் செய்யப்பட்டபின் காணுமற்போனது அல்லது தாமதிக்கப்பட்டது என்ற எவ்விதக் குற்றச்சாட்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. தமது விண்ணப்பங்களைக் கடைசித் திகதிவரை தாமதிக்கும் விண்ணப்பதாரிகள் தாமாகவே தமக்கு ஆபத்தைத் தேடுபவராவர்.

2. **சம்பளம்.**—இப்பதவிக்கான சம்பள விகிதம் பின்வருமாறுகும்—
**பட்டதாரிகளுக்கு**— ரூ. 3,420 — 4 × 120 — 8 × 180 — 6 × 240— ரூ. 6,780/– வருடாந்தம் ரூ. 4,080/–, ரூ. 4,800/–, ரூ. 5,580/– ஆகிய வருடாந்தச் சம்பளங்கள் பெறுமுன் திறமைக் கடப்புப் படிகள் உண்டு.

**பட்டதாரி அல்லாதவர்களுக்கு**—ரூ. 2,580—11 × 120—5 × 180— ரூ. 4,800/– வருடாந்தம். ரூ. 3,300/–, ரூ. 4,080/– ஆகிய வருடாந்தச் சம்பளங்கள் பெறுமுன் திறமைக் கடப்புப் படிகள் உண்டு.

3. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—(i) இப்பதவிகள் இளைப்பாற்றுச் சம்பளப் பிரமாணக் குறிப்பின் கீழ் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவையுமாகும். பெண் ஒருவர் நியமிக்கப்படுமிடத்து, அவர் சேமலாப நிதி நன்மைகளுக்கு உரித்துடையராவர். இந்நோக்கத்துக்கென அவர் தனது சம்பளத்தில் 5% அரசினர் சேவை சேமலாப நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படுபவர், ஏற்கனவே அரசினரின் கீழ் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான சேவையில் இல்லாவிடின் 3 வருட காலத்துக்கு, காலத்துக்கு ஏற்ப தகுதிகாண் அல்லது பரீட்சார்த்த முறையில் நியமிக்கப்படுவர்.

(ii) பெண் உத்தியோகத்தர் ஒருவர், சேமலாப நிதிக்குத் தொடர்ந்து கட்டணம் செலுத்தவோ அல்லது இளைப்பாற்றுச் சம்பள நிதிக்கு மாற்றப்படவோ விரும்புகிறார் என, 10 வருட மொத்த சேவையைப் பூர்த்தி செய்யுமுன் எந்நேரத்திலேனும் அறிவிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின் கீழ் அல்லது சேமலாப நலன்களைக் கொண்ட ஒரு பதவியில் அல்லது இவ்விரண்டின் கீழும் ஏற்கனவே 10 வருட சேவை பூர்த்தி செய்திருப்பின், நியமிக்கப்படும் 6 மாத காலத்துக்குள் தனது விருப்பத்தை அவர் தெரிவிக்க வேண்டும்.

(iii) தெரிவு செய்யப்படுபவர், நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் அரசினர் விதிகளிலும் பிரமாணங்களிலும் ஒரு பரீட்சையில் சித்தியடைய வேண்டும். அரசினர் சேவை ஆணைக்குழு விதிகளிலும் நிர்வாகப் பிரமாணங்களிலும் ஒரு வினாப் பத்திரமும், நிதி விதிகளில் இன்னொரு வினாப்பத்திரமும், கல்விச் சட்டத்தில் இன்னொரு வினாப் பத்திரமுமாக மூன்று வினாப் பத்திரங்களைக் கொண்டதாக மேற்குறித்த பரீட்சை அமையும். அங்ஙனம் சித்தியடையத் தவறுமிடத்து அவருடைய சம்பள உயர்ச்சிப்பணம் பிற்போடப்படும். விதிக்கப்பட்ட காலத்துக்கு மேலதிகமாக (இப்பரீட்சையில் சித்தி எய்துதற்கு) எடுக்கப்படும் காலம் சம்பளம் பிற்போடப்பட்ட காலமாகக் கருதப்படும்.

(iv) தெரிவு செய்யப்படுபவர், இரண்டாவது திறமைக் கடப்புப்படிக்கு மேலே பதவி உயர்ச்சி அளிக்கப்படமுன் நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்பின் II ஆந் தர உத்தியோகத்தர் ஆகியோருக்கான தேசீய மொழிகளிலான பரீட்சையில் (தமிழ் உத்தியோகத்தர்கள்) சிங்களத்திலும் (சிங்கள உத்தியோகத்தர்கள்) தமிழிலும் தகைமை பெற வேண்டும். இரண்டாவது திறமைக் கடப்புப் படி சம்பள மட்டத்தைத் தாண்டியவர்கள் மூன்றாவது திறமைக் கடப்புப்படி சம்பள மட்டத்துக்கு மேல் செல்லுமுன் மேற்குறித்த தகைமையைப் பெறவேண்டும். அங்ஙனம் சித்தியடையத் தவறுமிடத்து அவரது சம்பள உயர்ச்சிப் பணம் பிற்போடப்படும். விதிக்கப்பட்ட காலத்துக்கு மேலதிகமாக (இப்பரீட்சையில் சித்தி எய்துதற்கு) எடுக்கப்படும் காலம் சம்பளம் பிற்போடப்பட்ட காலமாகக் கருதப்படும்.

(v) உத்தியோகத்தர் ஒருவரை மேலும் சேவையில் வைத்திருத்தற்கு அவர் தகுதியற்றவரெனக் கருதப்படின் தகுதிகாண்/பரீட்சார்த்த காலத்தில் அல்லது அக்கால முடிவில் சேவையிலிருந்து அவர் விலக்கப்படலாம்.

(vi) தெரிவு செய்யப்படுபவர் தீவின் எப்பகுதியிலும் கடமை புரிய வேண்டும்.

4. **விண்ணப்பதாரிகளிடமிருந்து எதிர்பார்க்கப்படும் கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்.**—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்வதாக திருப்திகரமாக நிரூபிக்க வேண்டும் :—

(அ) 21.8.1969 ஆந் திகதியன்று 25 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கும் வித்தியாதிபதி முகாமைப் பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்களுக்கும் இவ் வயதுக் கட்டுப்பாடு அமையாது.

(ஆ) (i) **பட்டதாரிகளைப் பொறுத்தவரையில்**—அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் விவசாயப் பட்டமேனும் விவசாயப் பட்டத்துக்குச் சமமென, அங்கீகரிக்கப்படும், யாதேனும் தகைமையேனும் பெற்றிருக்க வேண்டும்.

**குறிப்பு.**—படிப்பித்தல் அனுபவம் பெற்றுள்ள பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(ii) **பட்டதாரிகள் அல்லாதவரைப் பொறுத்தவரையில்**—I ம் வகுப்பு பயிற்றப்பட்ட (சிங்கள/தமிழ்/ஆங்கில) தராதரப் பத்திரம் பெற்றிருப்பதுடன் பயிற்றப்பட்ட ஆசிரியராகக் குறைந்த பட்சம் 8 வருட சேவை புரிந்திருக்க வேண்டும். அல்லது 1 ம் வகுப்பு ஆசிரியர் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) தராதரப் பத்திரம் பெற்றிருப்பதுடன் ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்றபின் குறைந்தபட்சம் 8 வருட சேவை புரிந்திருக்க வேண்டும். மேலும், பேராதனை அல்லது குண்டசாலை விவசாயப் பாடசாலையால் விவசாயத்தில் வழங்கப்படும் தராதரப் பத்திரம் (II ம் வகுப்பு விரும்பற்பாலது) பெற்றிருக்க வேண்டும்.

(இ) சி. பா. த. ப. அல்லது க. பொ. த. ப. (சாதாரணதர) பரீட்சையில் அல்லது வேறு யாதேனும் உயர்ந்த பரீட்சையில் சிங்கள/தமிழ் மொழியில் அல்லது சிங்கள/தமிழ் இலக்கியத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(ஈ) சிறந்த நற்குணமுடையவராகவும் தேகாரோக்கியமுடையவராகவும் இருக்க வேண்டும்.

5. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளை அல்ல) இணைத்தனுப்ப வேண்டும்.

(i) பிறப்புச்சாட்சிப் பத்திரம் (மு.கு.—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(ii) பெற்றுள்ள கல்வித் தராதரப் பத்திரங்களும் உயர் தொழிற் தராதரப் பத்திரங்களும்.

(iii) சமீபகாலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள். (ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்கள் இவற்றை அனுப்ப வேண்டியதில்லை).

(iv) சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய பரீட்சைப் தராதரப் பத்திரம் அல்லது இதனை நிரூபிக்கும் வேறு யாதேனும் சான்று.

அரசினர் சேவையில் உள்ளவர்கள் நற்சாட்சிப் பத்திரங்கள் சமர்ப்பிப்பதிலிருந்து மட்டுமே தவிர்வு அளிக்கப்படுகின்றனர்.

6. இவ்விடயம் சம்பந்தமான விண்ணப்பங்களேனும் வேறு யாதேனும் கடிதங்களேனும் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) அனுப்பப்பட வேண்டுமேயொழிய அமைச்சில் கடமைபுரியும் எவ்வுத்தியோகத்தரின் பெயருக்குமல்ல.

7. அரசினர் செய்திமடலின் I ம் பகுதி II ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளனவையும் அரசினர் சேவையில் உள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளுக்கும் உங்கள் கவனம் கோரப்படுகிறது.

8. அரசினர் சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்ப வேண்டும். அரசினர், வித்தியாதிபதி முகாமைப் பாடசாலை ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு உரிய பிரதேச வித்தியாதிபதி/பிரதம வித்தியாதிகாரி மூலம் அனுப்ப வேண்டும். பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட்டு விதிக்கப்பட்ட திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பகுதித் தலைவரால் பெற்றுக்கொள்ளப்பட்டதென்றும் நியாயமான காரணங்களைக் காட்டி அதனை ஏற்றுக்கொள்ளும்படி அப்பகுதித் தலைவர் சிபார்சு செய்தாலன்றி, ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் அதுபற்றி நிரந்தரக் காரியதரிசிக்கு உடனே அறிவிக்க வேண்டும். இவ் ஏற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுவதற்கான உரித்தை இழப்பார்.

டீ. ஜீ. தயரத்ன,
நிரந்தரக் காரியதரிசியும்,
மகா வித்தியாதிபதியும்.

இல. பொ. நி./25/8,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2.
1969 ம் ஆண்டு ஜூலை மீ 24 ந உ.

8-248—1.8.69 ந் தேதிய வர்த்தமானி இல. 14,865

---

## பொலிஸ் பகுதி

### பொலிசுச் சாரதிப் பதவிகள்

பொலிசுப் பகுதியில் சாரதிப் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரிப் படிவத்தில் கொழும்பில் உள்ள பொலிசுப் பயிற்சிக் கலாசாலை அதிபருக்கு விலாசமிட்டு 1.9.1969 ம் திகதிக்கு முன்பாக, பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் தபால் உறையில் இடப்பக்கத்தின் மேற்புறத்தில் " பொலிஸ் சாரதிக்கான விண்ணப்பம் " என்று குறிக்கப்படல் வேண்டும்.

2. **வேதனம்.**—சேர்ந்தவுடன் வருடம் ஒன்றுக்கு ரூபா 750, ஒருவருட சேவையின் பின் ரூபா 840, பின் வருடாவருடம் ரூபா 42 விகிதம் 22 வருடாந்த உயர்வுகளுடன் ரூபா 1,764 வரை உயரும். ரூபா 1,050, ரூபா 1,260, ரூபா 1,470, ரூபா 1,638 வருடாந்த வேதனத்தை அடைய முன் வினைத்திறமைகாண் தடைகள் உண்டு.

3. **வேண்டப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்வருவனவற்றிற்குத் திருப்திகரமான சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) 1969 ம் ஆண்டு புரட்டாதி மாதம் முதலாம் திகதி 22 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். மாஜி இராணுவத்தினருக்கும், இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் கடற்படையிலிருந்து விலக்கப்பட்டவர்களுக்கும் வயதுச் சலுகையுண்டு. பொலிஸ் பகுதியில் தற்பொழுது கடமையாற்றுவோருக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு அமையாது.

(இ) சிங்களம்/தமிழ் அல்லது ஆங்கிலத்தில் அரசாங்க வித்தியாபகுதியினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையில் குறைந்தது 7 ம் வகுப்புச் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்கத்தில் கடமையாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு, இக் குறைந்த பட்ச கல்வித் தகைமைக் கட்டுப்பாடு எனது பரிசீலனையின் பின் தளர்த்தப்படும்.

(ஈ) வாகனங்கள் செலுத்துவதற்கான உத்தரவுச் சீட்டைப் பெற்றபின் மூன்று வருட அனுபவத்தோடு குற்றங்கள் எதும் ஏற்படாத வண்டி செலுத்தும் உத்தரவுச் சீட்டைப் பெற்றிருக்க வேண்டும். மோட்டார் பொறி நுட்பத்தில் அறிவுள்ளவர்கட்கும், எல்லாவித மோட்டார் வாகனங்களையும் இயக்கத் தகுந்த வண்டி செலுத்தும் உத்தரவுச் சீட்டுப் பெற்றவர்களுக்கும் அக்கட்டுப்பாடு அமையாது.

(உ) உயரத்தில் 5 அடி 4 அங்குலத்திற்குக் குறைந்தவர்களாக இருத்தல் கூடாது.

4. பரீட்சார்த்திகள் பின்வருவனவற்றில் பரீட்சிக்கப்படுவார்கள் :—

(அ) வாகனங்களை ஓட்டுவதிலும் அதனைப் பாவனை செய்வதிலும்.

(ஆ) வீதி ஒழுங்குகள் பற்றிப் பரீட்சார்த்திகளின் அறிவு, பரீட்சார்த்திகளால் தெரிவு செய்யப்பட்ட வாகனங்களைப் பற்றிய அடிப்படை இயந்திர அறிவும் போக்குவரத்து கை காட்டுமுறையும்.

(இ) அவர்களுடைய கல்வித் தராதரத்தைப் பற்றியும்.

**குறிப்பு.**—நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுபவர்களுக்குப் போக்குவரத்துச் செலவு கொடுபடமாட்டாது.

5. நியமனத்துக்கு முன்பு எல்லா விண்ணப்பதாரர்களும் வைத்தியப் பரிசோதனையில் தகுதியுடையவர்களாகக் காணப்படல் வேண்டும். ஒருவர் இலங்கையில் எப்பகுதியிலும் சேவை செய்வதற்குத் தகுதியுடையவர் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தாலும் அங்கவீனத்தாலோ அல்லது வேறு சரீரக் குறைபாடுகளாலோ பாதிக்கப்பட்டவராயிருந்தால் அக்குறைகள் அவருடைய நாளாந்த சாரதி வேலையைத் திறமையாகச் செய்வதற்குத் தடையாக இருக்குமாதலால் அவர் நியமனம் செய்யப்படமாட்டார்.

6. **பயிற்சிக் காலம்.**—பொலிசுச் சாரதியின் பயிற்சிக் காலம் 5 வாரமாகும். இப்பயிற்சியின் இறுதியில் பின்வருவனவற்றில் தேர்ச்சியடைய வேண்டும் :—

(அ) ஓட்டுதல்.

(ஆ) பொது வீதி விதிகள்.

(இ) மோட்டார் பொறிநுட்பம்—பயிற்சிமுறையும், போதனா முறையும்.

7. **நியமன நியதிகள்.**—இந்நியமனங்கள் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளமுடையவையுமாகும். விதவைகள் அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்கும் வேறு பொலிசுப் பகுதியிலுள்ள நிதிகளுக்கும் கட்டுப் பணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

8. **சேவை நிபந்தனைகள் :—**

(அ) தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மூன்று வருடங்களுக்குத் தகுதிகாண் நிலையில் வைக்கப்படுவார்கள். அரசாங்க சேவையில் முன்னமே இளைப்பாற்றுச் சம்பளத்தோடு கூடிய பதவிகளை வகிப்போராயின் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு " பதிலாக " நியமிக்கப்படுவர்.

(ஆ) தெரிவு செய்யப்பட்டவர்கள், அரசாங்கத்தின் பாஷைக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவருமுகமாக முன்னமே இயற்றப்பட்ட அல்லது இனிமேல் இயற்றப்படும் விதிகளுக்கு அமையவும் முக்கியமாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசாங்க பாஷைச் சட்டத்தை அமுலில் கொண்டு வருவதற்கு அமையவும் நடக்க வேண்டியவர்களாக இருப்பார்கள்.

(இ) தெரிவு செய்யப்பட்டவர்கள் அரசாங்க சேவை அதிகார சபை விதிகட்கும், நிதிப் பிரமாணங்கட்கும், நடைமுறைக் கைநூலில் உள்ள பிரமாணங்கட்கும், பகுதிக் கட்டளைக்கும் வேறு பொலிசுப் பிரதம அதிகாரியினுலோ அல்லது அரசாங்கத்தாலோ காலத்துக்குக் காலம் கொடுக்கப்படும் எந்தக் கட்டளைகட்கும் அமைய நடக்க வேண்டியிருக்கும்.

(ஈ) விண்ணப்பம் அனுப்பும்போது விவாகமானவர்களும் இப்பதவிகளுக்கு இப்போது விண்ணப்பங்கள் அனுப்பலாம். விவாகம் ஆகாதவர்கள் பதவியேற்ற பின்பு தங்கள் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படும் வரையில் விவாகம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனினும் இரண்டு வருடத் திருப்திகரமான சேவையின் பின் விவாகம் செய்ய விரும்புவோரின் மனுக்களைப் பொலிசுப் பிரதம அதிகாரி பரிசீலனை செய்து அனுமதி அளிக்கப்படும்.

(உ) அவர்கள் வாகனங்களை இயக்கச் செல்லாத நேரங்களில் பொலிசு நிலையத்திலோ அல்லது வேறு அலுவலகங்களிலோ அதிகாரத்திலிருக்கும் பொலிசு உத்தியோகத்தர் குறிப்பிடும் பொலிசு அதிகாரத்துக்குட்படும் எந்தச் சிறு வேலைகளையும் செய்ய வேண்டியவர்களாய் இருப்பார்கள்.

(ஊ) தகுதிகாண் பதிலாகக் கடமையாற்றுகாண் கால முடிவிலும் சம்பள உயர்வுக்கு முன்பும் ஒவ்வொரு சாரதியும் அவரது வாகன ஓட்டுதலிலும், வாகனங்களைப் பாவனை செய்தலிலும் திருப்திகரமான திறமை உடையவரா என்று பரிசோதிக்கப்படுவர்.

9. விண்ணப் தாரர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளையும் இணைக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சான்றிதழ்.

(ஆ) அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள்.

(இ) வண்டி செலுத்தும் உத்தரவுச் சீட்டு.

(ஈ) கல்வித் தகைமைச் சான்றிதழ்.

10. இலங்கை அரசாங்க வர்த்தமானி (கசெற்) I ம் பாகம் II ம் பிரிவின் தொடக்கத்தில் பிரசுரித்திருக்கும் பொது சேவை பதவிகள் நியமனங்கட்காய நிபந்தனைகளைப் பார்க்கவும்.

11. நியமிக்கப்படுவோருக்கு இவ்வசதிகள் அளிக்கப்படும் :—

(அ) இலவச குடிமனை.

(ஆ) இலவச கோலஉடை.

(இ) பெட்டி, படுக்கை, சப்பாத்து, அவைகளைச் சுத்தி செய்யும் உபகரணங்கள் முதலியன.

12. ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தத்தம் பகுதித் தலைவர்க்கூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

13. முடிவு திகதியின் பின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. மேல் குறிப்பிடப்பட்ட தேவைகட்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ஈ. எல். அபயகுணவர்த்தன,
பொலிஸ் பிரதம அதிகாரி.

பொலிஸ் தலைமைக் காரியாலயம், கொழும்பு 1,
1969 ம் ஆு ஜூலை மீ 24 ந உ.

## விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பகாரரின் முழுப்பெயர் (பெரிய எழுத்துக்களில்) :————.

2. விலாசம் (பெரிய எழுத்துக்களில்) :————.

3. (அ) பிறந்த திகதி :————.
   (ஆ) 1.9.69 ல் வயது :————.

4. (அ) தேசிய இனம் :————.
   (ஆ) இலங்கையராகில் வம்சாவழி வந்தவரா அல்லது பதிவு மூலமா ? (பதிவு மூலமாகவாயின் பதிவுச் சான்றிதழின் பிரதி அனுப்பப்பட வேண்டும்) :————.
   (இ) வம்சாவழி வந்த இலங்கையராயிருந்தால், கீழ்க்காணுவோரின் பிறந்த இடங்களைக் கூறுக :—
      (அ) விண்ணப்பக்காரர் :————.
      (ஆ) விண்ணப்பகாரரின் தகப்பன் :————.
      (இ) விண்ணப்பகாரரின் தகப்பன் வழிப்பூட்டன் :————.

5. என்ன வகுப்புச் சித்தியடைந்திருக்கின்றீர் :————.
   (மொழியைக் குறிப்பிடுக)

6. (அ) வண்டி செலுத்தும் உத்தரவுச் சீட்டு இலக்கம் :————.
   (ஆ) எவ்வித மோட்டார் வாகனங்கள் செலுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது :————.
   (இ) பஸ் வண்டிகள் அல்லது லொறிகள் போன்ற பாரமுள்ள வாகனங்களைச் செலுத்தக்கூடிய வண்டி செலுத்தும் உத்தரவுச் சீட்டு விஸ்தரிக்கப்பட்டுள்ளதா ? அப்படி விஸ்தரிக்கப்பட்டிருப்பின் எந்தத் திகதி தொடக்கம் :————.

7. மோட்டார் இயந்திரத் தொழில் பயிற்சியுண்டா ? :————.

8. ஏதாவது விசேட தகைமைகள் :————.

9. தற்போதைய உத்தியோகம் :————.

10. அரசாங்கத்தின் கீழ் எப்போதாவது சேவை செய்ததுண்டா ? அப்படியாயின் கால எல்லைகளுடன் விபரங்களும், திணைக்களம், பதவி அத்திணைக்களத்தை எச்சந்தர்ப்பத்தில் விட்டு நீங்கியதென்பதையும் குறிப்பிடுக :————.

11. எந்த இன்சூரன்ஸ் கம்பனியாவது எப்பொழுதாவது உம்மை " இன்சூர் " செய்ய மறுத்ததுண்டா ? :————.

12. நற்சான்று இதழ்கள் கொடுத்த இருவரின் பெயர்கள், விலாசங்கள், பதவிப் பெயர்கள் :————.

13. பொலிஸ் சேவையில் இதற்குமுன் சாதி அல்லது கொஸ்தாப்பு வேலைக்கு விண்ணப்பித்தீரா ? அப்படியாயின் அதன் முடிவு என்ன ? முடியுமாயின் முன் தொடர்பு குறிப்பிடுக :————.

14. நீர் அல்லது உமது சுற்றத்தாரில் யாராவது குற்றத்தில் சிக்கியோ கட்டளை செய்யப்பட்டோ, சாட்டப்பட்டோ அல்லது குற்றவாளி எனக் காணப்பட்டோ இருக்கிறீர்களா ? :————.

15. நீர் விவாகமானவரா ? ஆகாதவ்ரா ? :————.

இந்த விண்ணப்பப் பத்திரத்தில் என்னுல் கொடுக்கப்பட்டிருக்கும் விபரங்கள் அனைத்தும் உண்மையானதும் சரியானதும் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

இடம் :————.
திகதி :————.

8–161—1.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,865

---

## வதுளை மாவட்டத்தில் கனஹெல பிரிவிற்கு பிறப்பு, இறப்பும் யட்டிசிந்த பிரிவிற்கு விவாக (பொது, கண்டியர்) பதிவாளர் பதவி

கனஹெல பிறப்பு, இறப்பு பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள் **அல்லது** பொது மக்களால் அங்கீகரிக்கப்படக் கூடியவர்கள், ஆண், பெண், இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்கு குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களை பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்கள், ஏனைய பிறதராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும் உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும் பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவு தாபன நிலையங்களிலும் இந்த பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1969 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

பி. எஸ். விஜேவீர,
மாவட்ட பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
பதுளை,
1969 ம் ஆு ஜூலை மீ 20 ந உ.

8-191—1.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,865

## பொது வேலைத் திணைக்களம்

### தொழினுட்ப உதவியாளர் (துப்புரவு ஏற்பாடு) பதவி

இந்தத் திணைக்களத்திலுள்ள தொழினுட்ப உதவியாளர் (துப்புரவு ஏற்பாடு) பதவிக்கு இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே தரப்பட்டுள்ள படிவத்தில் நிரப்பப்பட்டு, "பொது வேலைப் பணிப்பாளர், கிளை 'ஈ' பொது வேலைத் திணைக்களம், கொழும்பு 1" என்ற முகவரிக்குப் பதிவு அஞ்சலில் 22.8.1969 அன்று அல்லது அதற்கு முன்னர் அவருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

2. சம்பளம் :

இந்தப் பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் ஆண்டிற்கு ரூபா 2,580 இல் தொடங்கி 120 ரூபாவையும் 180 ரூபாவையும் கொண்ட ஆண்டு உயர்ச்சிகள் பெற்று ஆண்டிற்கு ரூபா 4,620 வரை செல்லும்; ஆண்டிற்கு 4,620 ரூபாவைப் பெறுமிடத்து இரு ஆண்டுகள் உயர்ச்சி நிறுத்தப்படும்; பின்னர் ஆண்டிற்கு 4,800 ரூபாவிற்றொடங்கி 6,540 ரூபாவும் முறையே 180 ரூபாவையும், 240 ரூபாவையும் கொண்ட ஆண்டு உயர்ச்சிகளைப் பெற்று ஆண்டுக்கு ரூபா 6,540 வரை செல்லும்.

3. வயது :

40 வயதிற்கு மேற்பட்டவராய் இருத்தலாகாது. (ஏற்கனவே அரசாங்க சேவையில் இருப்பவருக்கு வயது எல்லை பொருந்தாது.)

4. பதவி நியமன நிபந்தனைகள் :

(i) பதவியானது நிரந்தரமானதோடு ஓய்வூதியத்தைக் கொண்டதுமாகும். நியமிக்கப்பட்டவர்கள் விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை அளித்தல் வேண்டும்.

(ii) குறுகிய கால அறிவித்தலில் நியமனப் பொறுப்பேற்க அவர்கள் வேண்டப்படுவர்.

5. வேண்டிய தகைமைகள் :

(i) சிறந்த குணமும் உடல்நலமும் பெற்றிருத்தல் வேண்டும்.
(ii) இரண்டிற்கு மேற்படாத தடவைகளில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் (தூய அல்லது பிரயோக), பௌதிகம் என்பன உட்பட ஆறு பாடங்களில் கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தரம்) அல்லது கணிதம் (தூய அல்லது பிரயோக) பௌதிகம், ஆகிய பாடங்களுடன் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் அல்லது இதற்கு ஒத்த அல்லது உயர் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(iii) இலங்கைத் தொழினுட்பக் கல்லூரியின் கட்டட அமைப்பு படி I இலும் படி II இலும் சித்தியடைந்திருக்க வேண்டியதோடு இலங்கைத் தொழினுட்பக் கல்லூரியின் மாநகரமன்ற எந்திரவியலில் 3 ஆண்டு பகுதி நேரப் பயிற்சியினை முடித்திருக்கவும் வேண்டும். அல்லது உயர் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(iv) குறைந்தது பத்து ஆண்டு அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்; இவற்றில் குறைந்தது மூன்று ஆண்டுகளாவது படவரைவு அலுவலக அனுபவமாக இருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பகாரர்கள் பின்வரும் சாதனங்களின் படிகளை (மூலங்கள் அல்ல) இணைத்தல் வேண்டும் :—

(i) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.);

(ii) உயர் கல்வித் தகைமைச் சான்றிதழ்கள்;

(iii) பெறப்பட்ட தொழினுட்பத் தகைமைச் சான்றிதழ்கள்;

(iv) முன்னை அனுபவத்தையும் நியமனங்களையும் குறிக்கும் சான்றிதழ்கள்;

(v) அண்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட இரு குணவியல்புச் சான்றிதழ்கள் (அரசாங்க சேவையில் ஏற்கனவே இருக்கும் வேட்பாளர்கள் இந்தத் துணைப் பிரிவின்கீழ் நற்சான்றிதழொன்றை அளிக்க வேண்டப்படமாட்டார்.)

7. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களது விண்ணப்பங்கள் அவரவர் திணைக்களங்களின் தலைவர்களினூடாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விதித்த திகதிக்குப் பின்னர் இந்த அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள், விதித்த திகதிக்கு முன் விண்ணப்பகாரரின் திணைக்களத் தலைவரினால் பெற்றுக் கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரினால் தாமதத்திற்கான தகுந்த காரணம் காட்டப்பட்டு சிபாரிசு செய்யப்பட்டாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

8. இந்த வர்த்தமானியின் பகுதி I இன் பிரிவு II இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது.

9. விண்ணப்பங்கள் அல்லது அதன் தொடர்பான வேறு ஏதேனும் கடிதத் தொடர்புகள் பந்தி 1 அல் குறிப்பிட்டவாறன்றி, இந்தத் திணைக்களத்து உத்தியோகத்தர் எவருக்கேனும் நேரடியாக முகவரியிடப்படலாகாது.

சா. வி. மி. அபொன்சு,
பொது வேலைப் பணிப்பாளருக்காக.

பொது வேலைத் திணைக்களம்,
கொழும்பு,
14.7.1969.

## பொது வேலைத் திணைக்களம்

### தொழினுட்ப உதவியாளர் (துப்புரவு ஏற்பாடு) பதவிக்கான விண்ணப்பம்

1. (i) பெயர் (முதலெழுத்துக்களுடன்) :————.

(ii) முழுப் பெயர் ;————.
(தனித்தனி எழுத்துக்கள்)

2. அஞ்சல் முகவரி :————.

3. (i) பிறந்த திகதியும் இடமும் :————.

(ii) 1969 ஆம் ஆண்டு 8 ம் திங்கள் 22 ஆந் திகதியன்று வயது : ஆண்டு :————. மாதம் :————.

4. நாட்டினம் :————.
(i) பரம்பரையாலா அல்லது பதிவாலா இலங்கைக் குடி :————.

5. பிறந்த இடம் :————.
(i) விண்ணப்பகாரரின் தந்தை :————.
(ii) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பேரன் :————.
(iii) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பூட்டன் :————.

6. தற்போது வகிக்கக்கூடிய பதவி இருப்பின் :————.
(i) தற்போதைய பதவி :————.
(ii) திணைக்களம் :————.
(iii) சம்பள விவரங்கள் :————.

7. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சைகளைக் குறிக்குக).————.

8. தொழினுட்பத் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சைகளை குறிக்குக: ————.

9. முன்னை அனுபவ விவரங்கள் :————.

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விவரங்கள் யாவும் உண்மை யானவையும் சரியானவையுமென அத்தாட்சிப்படுத்துகிறேன். இங்கு என்னுற் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களில் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும் நியமிக்கப்பட்ட பின்னராயின் எவ்வித நட்ட ஈடுமின்றி விலக்கப்படுவதற்கும் பாத்திரனுவேன் என்பதை அறிந்திருக்கிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————

8–100—1.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,865

## சிவில் வான் செலவுத் திணைக்களம்

### பண்டசாலைப் பொறுப்பாளர் பதவி—தரம் I

சிவில் வான்செலவுத் திணைக்களத்தில் பண்டசாலைப் பொறுப்பாளர் பதவி தரம் I க்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் கீழே தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தில் நிரப்பப்பட்டு சிவில் வான் செலவுப் பணிப்பாளர், த. பெ. எண். 535, லோட்டஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு 15.8.1969 திகதியோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

**2. சம்பள வீதம்.—**

இப்பதவிக்குரிய சம்பளம் ஆண்டொன்றுக்கு ரூ. 2,700 தொடங்கி ஆண்டொன்றுக்கு ரூ. 120 கொண்ட 9 ஏற்றங்களாக உயர்ந்து ரூ. 3,780 வரை செல்லும்.

**3. வயதெல்லை.—**

15.8.1969 திகதியன்று 25 வயதுக்கு குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பகாரர்களுக்கு இந்த வயது மேலெல்லை பொருத்தமுடையதாகாது.

**4. விண்ணப்பகாரர்களுக்கு வேண்டிய கல்வித் தகைமைகளும் பிற தகைமைகளும்.—**

(அ) (i) சிரேட்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சையில் அல்லது பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) பரீட்சையில் சிங்களம்/தமிழ், கணக்கியல்/எண்கணிதம் என்னும் பாடங்களுடன் இரு தடவைகளில் 6 பாடங்களில் சித்தியடைந்தவராயும் அல்லது இதற்கொப்பான வேறு பரீட்சையில் சித்தியெய்திப் 10 ஆண்டுகளுக்கு மேலாகப் பண்டசாலைப் பொறுப்பாளர் அனுபவம் உடையவராயும் ;

அல்லது

கனிட்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சையில் சித்தியெய்தி 15 ஆண்டுகளுக்கு மேலாகப் பண்டசாலைப் பொறுப்பாளர் அனுபவம் உடையவராயுமிருத்தல் வேண்டும்.

(ii) மேலும் பண்டசாலைக் கணக்கியல், பொருள் தருவித்தல், சரக்கு முதலேடுகள் பேணுதல், பேரேடுகள், பிற சாதனங்கள் என்பனவற்றைப் பேணுதல் ஆகியவற்றிலும் அறிவுடையவராயிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.—**

விமானத்துறையில் உபயோகிக்கப்படும் எல்லாப் பொருட்களின் அடையாளமறிதல், அவற்றைச் சரிபார்த்தல், செலவினமாக்கல் என்பனவற்றில் அனுபவம் உடையவர்களுக்கும் இப் பொருட்களின் உபயோகம் பற்றிய அறிவுடையவர்கட்கும் தட்டெழுத்து அறிவுடையவர்களுக்கும் முன்னுரிமை காட்டப்படும்.

**5. சேவை நிபந்தனைகள்.—**

இப் பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பளத் தகுதியுடையதுமாகும். கைம் பெண்கள், அனாதைகள் உபகாரச் சம்பளத் திட்டத்திற்கு உதவு தொகை செலுத்துமாறு வேண்டப்படுவர்.

6. விண்ணப்பகாரர்கள் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலங்களை அல்ல) விண்ணப்பப் பத்திரத்துடன் இணைத்தனுப்புதல் வேண்டும்:—

(அ) பிறப்புச் சான்றிதழ் (**நன்கு கவனிக்குக :** சமய நிட்சைச் சான்றிதழ் அல்லது உதவி பெறும் பாடசாலைகளுக்காகிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.) ;
(ஆ) கல்வித் தகைமைகளை ஆதரிக்கும் வகையிலான சான்றிதழ் ;
(இ) அனுபவமுடையரெனச் சான்று பகரும் சான்றிதழ் ;
(ஈ) குணவியல்புச் சான்றிதழ்கள் இரண்டு.

7. இந்த அரசாங்க வர்த்தமானியில் பகுதி I பிரிவு II இன் தொடக்கத்தில் வெளியிடப் பெற்றுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்குமைவான பொது நிபந்தனைகளைக் கவனத்திற் கொள்க.

8. விண்ணப்பங்கள் அல்லது அவை தொடர்பான கடிதத் தொடர்புகள் யாவற்றையும் சிவில் வான் செலவுப் பணிப்பாளருக்கேயன்றி இத் திணைக்களத்திலுள்ள வேறெந்த உத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பக் கூடாது.

டபிள்யு. எல். பி. டி மெல்,
பணிப்பாளர்,
சிவில் வான்செலவுத் திணைக்களம்.

சிவில் வான்செலவுத் திணைக்களம்,
த. பெ. எண். 535, லோட்டஸ் வீதி,
கொழும்பு 1,
மே 1969.

### விண்ணப்பப் படிவம்

#### பண்டசாலைப் பொறுப்பாளர் பதவி—தரம் I

1. முழுப்பெயர்:————.
(தனித் தனி எழுத்தில்)
2. அஞ்சல் முகவரி:————.
3. பிறந்த தேதியும் வயதும்:————.
4. இலங்கையரா என்பதனைக் குறிப்பிடவும் :—
(i) பரம்பரையால்:————.
(ii) பதிவால்:————.
5. சித்தியடைந்துள்ள உயர் தேர்வு:————.
(சித்தியடைந்த பாடங்களைக் குறிப்பிடுக)
6. அனுபவம்:————.
7. இருக்கக்கூடிய விசேட தகைமைகளினதும் கோரிக்கைகளினதும் விவரங்களைக் குறிப்பிடுக:————.
8. தற்போதைய பதவி/தொழில் விவரங்களைக் குறிப்பிடுக:————.

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விவரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவிற்கு முன் அவ்வாறு காணப்படுமிடத்து நான் தகுதியற்றவராதற்கு ஆளாவேன என்பதனையும், நியமனத்தின் பின் காணப்படுமிடத்து நட்டஈடின்றி விலக்கப்படுதற்கு ஆளாவேன் என்பதனையும் நான் அறிவேன்.

————.
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

8–98—1.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,865

---

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

### படகுகளின் தலைவர்ப் பதவி

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவில் படகுகளின் தலைவர்ப் பதவிக்கென விணணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே தரப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்தில் விண்ணப்பங்களைத் தயாரித்து 1969 ஒக்தோபர் 1 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இவ்வலுவலகத்தில் கிடைக்கும்படியாக அனுப்புதல் வேண்டும்.

**2. சம்பளங்களும், படிகளும், சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவிக்கான சம்பள அளவுத்திட்டம் :

வருடமொன்றுக்கு ரூபா 1,980—120—3,300. வாடகைப் படியும், தற்காலிக வாழ்க்கைச் செலவுப்படிகளும் அரசாங்க ஒழுங்கு விதிகளுக்கு அமையக் கொடுக்கப்படும். மேற்கூறிய சம்பள அளவுத் திட்டத்தில் தகுந்த ஒரு படியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தியின் சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

**3. நியமன விதிகள்.—**

(1) பதவி நிரந்தரமானது, அத்துடன் இளைப்பாறுச் சம்பளமுடையது. நியமனம் முதலில் மூன்று வருட காலத்துக்கு தகுதிகாண் நிலையில் இருக்கும் ;

(2) தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி குறுகிய கால அறிவித்தலில் பதவியேற்க வேண்டும்.

**4. தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்வரும் தகைமைகளையுடையவர் என்பதற்குத் திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும் :—

(1) விண்ணப்பங்களை ஏற்பதற்கான கடைசித் திகதியன்று விண்ணப்பதாரரின் வயது 25 வருடங்களுக்கும் 45 வருடங்களுக்கும் இடையில் இருத்தல் வேண்டும் ;

(2) கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிலாவது சித்தி அடைந்திருத்தல் வேண்டும் ;

(3) கரையோரப் பாதை வியாபாரத்தில் துணைத் தலைவருக்கான அல்லது தலைவருக்கான சான்றிதழை உடையவராக இருத்தல் வேண்டும். துணைத் தலைவர்களின் பரீட்சைக்குத் தோன்ற வென விண்ணப்பித்தவர்களிடமிருந்தும் இப் பதவிக்கென விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். அப்படிப்பட்டவர்கள் நேர்முகப் பரீட்சையின்போது துணைத் தலைவருக்கான சான்றிதழை உடையவர்களாக இருத்தல் வேண்டும். 1,500 தொன் எடைக்குக் குறைவான கொள்ளளவுள்ள கரையோரப் பாதை கப்பல்களின் துணைத் தலைவர்களுக்கான தகுதிகாண் சான்றிதழ்ப் பரீட்சை பற்றிய விதிகளை " மாஸ்டர் அற்றென்டன், கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு, கொழும்பு 1 " என்ற முகவரிக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

மு.க.—குடித்துறை எந்திரவியல் சம்பந்தமான, விசேடமாக கடற்கரை வேலை சம்பந்தமான நிர்மாண, பராமரிப்பு வேலைகள் பற்றிய அறிவு இருப்பது மேலதிக தகைமை யெனக் கருதப்படும்.

5. **பதவியின் கடமைகள்.—**

(அ) கடற்கரைப் பிரிவிலுள்ள எல்லா மிதக்கும் மரக்கலங்களையும் பேணுதல், பங்கிடுதல், கட்டுப்படுத்தல் ;

(ஆ) " ஜீ வால் " என்னுமிடத்திலுள்ள எல்லா மரக் கலங்களிலும் சுமைகள் ஏற்றுவதைக் கட்டுப்படுத்துதல் ;

(இ) " சின்கர் " இரக சிறு மரக்கல நங்கூர சாதனங்களைப் பராமரித்தல்

(ஈ) வேறேதும் கடமைகள்—அவரிடம் ஒப்படைக்கப்பட்ட சேறுவாரும் (கிரப் டிறெஜ்ஜிங்) வேலைகளை மேற்பார்வை செய்தல் போன்ற கடமைகள்.

6. விண்ணப்பங்கள் அல்லது இப்பதவி தொடர்பான வேறேதும் கடிதத் தொடர்புகள் " கப்பற்றுறை ஆணையாளர், கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு, கொழும்பு 1 " என்ற முகவரிக்கு அனுப்பப் படுதல் வேண்டும். அவைகளை இத்திணைக்களத்து வேறெந்த உத்தியோகத்தருக்கும் அவரின் சொந்தப் பெயருக்கு அனுப்புதல் ஆகாது. உத்தியோகத்தர் எவரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. விண்ணப்பதாரர்கள் இப்பதவிக்குத் தகுதிவாய்ந்தவர்களா என்பது பற்றியும், அவர்களின் பண்பு பற்றியும் அண்மையில் அவர்கள் பெற்ற நற்சான்றிதழ்களில் குறைந்தபட்சம் மூன்று நற்சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும்.

8. விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றதற்கான அறிவித்தல் கொடுக்கப்படமாட்டாது.

9. இவ் வர்த்தமானியின் 1 ஆம் பகுதி, 2 ஆம் தொகுதி தொடக்கத்தில் பிரசுரிக்கப் பட்டிருக்கும் அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக.

எச். குணதிலக்கா,
கப்பற்றுறை ஆணையாளர்க்காக.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு யூலை மீ 24 ந் உ.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

**கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு**

**படகுகளின் தலைவர்ப் பதவி**

1. முழுப்பெயர் : ————.
2. அஞ்சல் முகவரி : ————.
3. பிறந்த திகதி : ————.
4. மிகக் கூடுதலாகப் பெற்ற கல்வித் தகைமைகள் : ————.
5. கரையோரப் பாதை வியாபாரத்தில் துணைத் தலைவருக்கான அல்லது தலைவருக்கான சான்றிதழ் உண்டா ? : ————.
6. குடித்துறை எந்திரவியல் சம்பந்தமான நிர்மாண வேலையிலும், கடற்கரை வேலை பராமரிப்பிலும் அறிவும், அனுபவமும் இருந்தால் விபரம் தருக : ————.
7. நற்சான்றிதழ்கள் தந்தவர்களின் பெயர்களும், பதவிகளும் : ————.
8. வேறேதும் உரிமைக் கோரிக்கைகள் இருப்பின் விபரம் தருக : ————.
9. பின்வரும் சாதனங்களின் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளன —
   (அ) பிறப்புச் சான்றிதழ் : ————.
   (ஆ) மிகக் கூடுதலாகப்பெற்ற கல்வித் தகைமைக்கான சான்றிதழ்கள் : ————.
   (இ) கரையோரப் பாதை வியாபாரத்தில் துணைத் தலைவருக்கான அல்லது தலைவருக்கான சான்றிதழ் : ————.
   (ஈ) மூன்று நற்சான்றிதழ்கள் : ————.

மேலே தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும், சரியானவை என்றும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ————.

8–181—1.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,865

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும்

### கல்வி அமைச்சு

**இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி**

**வர்த்தகப் பிரிவில் நடைபெறும் பயிற்சி நெறிகளுக்கு மாணவர்களைச் சேர்த்தல்—கல்லூரி ஆண்டு 1969–70**

மருதானை, இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் வர்த்தகப் பிரிவில் நடைபெறும் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு மாணவர்களைச் சேர்த்தற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

| பயிற்சி நெறி | போதனமொழி | காலம் | நேரம் |
|---|---|---|---|
| 1. வர்த்தகத் தகுதித் தேர்வு | சிங்களம்/ஆங்கிலம் | 4 வருடங்கள் | பகல் முழுநேர வகுப்பு |
| 2. கணக்கியல் தகுதித் தேர்வு | சிங்களம்/ஆங்கிலம் | 4 வருடங்கள் | பின்னேர வகுப்பு |
| 3. செயலாண்மைத்துறையில் உயர்தொழில் பயிற்சி நெறி | ஆங்கிலம் | 4 வருடங்கள் | பகல் முழுநேர வகுப்பு |
| 4. போக்குவரத்துத் துறையில் உயர் தொழில் பயிற்சி | ஆங்கிலம் | 4 வருடங்கள் | பின்னேர வகுப்பு |
| 5. உயர்தர சுருக்கெழுத்துப் பயிற்சி நெறி | சிங்களம்/ஆங்கிலம் | 1 வருடம் | பின்னேர வகுப்பு |
| 6. செலவுக் கணக்கியலில் உயர் தொழில் பயிற்சி நெறி | ஆங்கிலம் | முதலாம் வருடம் | பகல் முழுநேர வகுப்பு |

2. மேற்குறித்த பயிற்சி நெறி எதற்கும் மாணவர்களை அனுமதித்தற்கு புகுமுகப் பரீட்சை ஒன்றும் நடைபெறமாட்டாது. ஒரு வாய்மூலப் பரீட்சை மூலமே மாணவர்களை அனுமதித்தல் தீர்மானிக்கப்படும்.

3. வேலையில் அமர்ந்துள்ளவர்களின் விண்ணப்பங்கள் அவர்களை வேலைக்கு கொண்டுள்ளவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும் ; அத்தகைய விண்ணப்பங்களை அவர்கள் விதப்புரை செய்து அனுப்பும்போது விண்ணப்பதாரியின் வேலையின் தன்மை பற்றித் திட்டமாகக் குறிப்பிட வேண்டும். வேலைக்கு அமர்த்தியுள்ளவர்கள் மூலம் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. ஒரு வருட பயிற்சி நெறிக்கான விண்ணப்பக் கட்டணம் ரூபா 1.00 உம் ஏனைய பயிற்சி நெறிகள் ஒவ்வொன்றுக்குமான கட்டணம் ரூபா 2.00 உம் ஆகும். இப்பெறுமதி முத்திரைகள் விண்ணப்பப் படிவங்களில் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அவை அழிக்கப்பட வேண்டும்.

4. தகவுத்திறன் நிபந்தனைகள் உட்பட சகல பயிற்சி நெறிகள் பற்றிய சகல விபரங்களும் இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் வர்த்தகப் பிரிவால் வெளியிடப்படும் கைநூலில் கொடுக்கப்பட்டுள்ளன. இக்கைந்நூலை ரூபா 2.80 கொடுத்து கொழும்பு 1, பழைய செயலகத்திலுள்ள அரசினர் வெளியீடுகள் விற்பனை நிலையத்திலிருந்து நேரடியாகவேனும் ரூபா 3.30 (தபால் செலவுட்பட) அனுப்பி மருதானை, இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியிலிருந்து தபால்மூலமேனும் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்களை நிரப்புமுன் இக்கைந்நூலை வாசிக்குமாறு விண்ணப்பதாரிகளுக்கு ஆலோசனை கூறப்படுகின்றது.

5. கொழும்பு 10, இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரிப் பதிவாளரிடமிருந்து பெறப்பாலனவான படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, 1969 ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவருக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

6. உரிய பெறுமதிக்குக் குறைவாக முத்திரைகள் ஒட்டப்பட்ட அல்லது முற்றுகப் பூரணப்படுத்தப்படாத அல்லது உரிய படிவத்தில் சரியாக நிரப்பப்படாத அல்லது உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

ஏஸ். எல். டி சில்வா,
பிரதி மகா வித்தியாதிபதி (தொழில்நுட்பக் கல்வி)
மகா வித்தியாதிபதிக்காக.

கொழும்பு 2,
1969 ம் ஆடு ஜுலை மீ 25 ந உ.

8–247—1.8.69 ந் தேதிய வர்த்தமானி இல. 14,865

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் போக்கு வரத்துச் சபை

கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1969 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி வியாழக்கிழமை மு. ப. 10 மணிவரை, பின்வரும் வேலைகளுக்காகப் பிரத்தியேக பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

(1) **மாத்தறை—வசுக் காலை** — வசு ஒதுக்கிடங்களை அமைத்தல்

(2) **பொலனறுவை** — டிப்போ அத்தியட்சகரின் அலுவலகத்தை அமைத்தல்

பிரதம சிவில் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய பத்திரங்களில், கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் செய்யப்படவேண்டும். இவரிடமிருந்து எல்லா விவரங்களையும் பெற்றுக்கொள்வதுடன், இவரின் அலுவலகத்தில் பட வரைவுகளையும் பரிசீலனை செய்யலாம். 1 ஆம் இலக்க வேலைக்கு ரூபா 45,000 தொகைக்கும் 2 ஆம் இலக்க வேலைக்கு ரூபா 50,000 தொகைக்கும் குறையாத சிவில் பொறியியல் வேலைகளுக்காக இ. போ. ச. வில் அல்லது அரசாங்க திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்கள், தேவையான கேள்விப்பத்திரச் சாதனங்கள் வழங்கப்படுவதற்காக, கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 100 க்கான கேள்விப்பத்திரக் கட்டுப்பணப் பற்றுச்சீட்டையும் கேள்விப்பத்திரச் சாதனங்களுக்கு மீளளிக்கப்படமாட்டாத கட்டணமான ரூபா 25 க்கான பற்றுச்சீட்டையும் 1969 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாகக் காட்டுவதன்பேரில் கேள்வியிடத் தகவுடையவர்களாயிருப்பார்கள். கேள்வியிடுபவர்கள் தங்களுடைய சான்றேரூலைகளைப் பரிசோதனைக்குக் காட்டவேண்டும். அவ்வித சான்றேரூலைகள் பிரதம சிவில் பொறியியலாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்டபின், கேள்விப்பத்திரக் கட்டுப்பணத்தை **காசாக மாத்திரம்** பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கட்டலாம்.

பிரதம சிவில் பொறியியலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
கொழும்பு 5.

8–202—1.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,865

---

## நீர்ப்பாசனப் பகுதி

நீர்ப்பாசன இலாகா முல்லைத்தீவு உபபகுதியின் கீழ் அரசாங்கப் பொருள்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கு வட பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர், வவுனியா, அவர்களால் 15.8.1969 காலை 10 மணிவரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

ரூபா 15,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு இப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு மாத்திரமே, நீர்ப்பாசனப் பொறியியலாளர், வவுனியா, மன்னார், வவுனிக்குளம், கிளிநொச்சி, ஒட்டுசுட்டான், அவர்களால் 1.8.69 தொடக்கம் 11.8.69 வரைக்கும் கேள்விப்பத்திரங்க்ள் வளங்கப்படும். இக்கேள்விப்பத்திரங்கள் ரூபா 25 வைப்புப் பணமாகக் கட்டியதன் மேல் மட்டுமே கொடுக்கப்படும். மற்றும் விப்ரங்களை நேரிலோ அல்லது கடித மூலமாகவோ நீர்ப்பாசனப் பொறியியலாளர், முல்லைத்தீவு உபபகுதி, ஒட்டுசுட்டான், அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
முல்லைத்தீவு உபபகுதி அலுவலகம்,
ஒட்டுசுட்டான்.

1969 ம் ஆடு ஜுலை மீ 23 ந உ.

8–168—1.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,865.

---

## *புத்தளம் நீர்ப்பாசன உப பிரிவு*

*புத்தளம் உபபிரிவின் கீழ் பொருட்கள் 1969-70 ஆண்டுகட்கு ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டுசெல்வதற்கு (ஏற்றுவது இறக்குவதுடன்) கேள்விப் பத்திரங்கள் குருநாக்கலிலுள்ள வடமேற்பகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினுல் 1969 ம் ஆண்டு ஓகஸ்து மாதம் 19 ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்; அதன் பின்னர் உடன் திறக்கப்படும்.*

*2. 15,000 ரூபாவும் அதற்கு மேலும் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர் மட்டுமே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர். லொறிகள் சொந்தமாக வைத்திருக்கும் கொந்தராத்துக்காரர்கள் மட்டுமே கேள்விப் பத்திரங்கள் அனுப்புவதற்குத் தகுதியுடையவராவர்.*

*3. இக் கேள்விக்காய வெற்றுப் பத்திரங்கள் வட்மேற்பகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரின் கீழுள்ள எந்த நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்திலும் அலுவலக நேரங்களில் 1969 ம் ஆண்டு ஓகஸ்து மாதம் 16 ந் திகதி பிற்பகல் 1 மணி வரைக்கும் பெற்றுக் கொள்ளலாம்.*

*4. கேள்வியாளராக முன் வருவோர் கேள்விப் பதிவுப் புத்தகங்களுடன் தற்பொழுது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபாங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். வெற்றுப்பத்திரங்கள் வழங்க முன்னர் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் கேள்விக் கட்டணத்தின் தொகை 25 ரூபாவைக் கேள்விப்பத்திரங்களுக்குச் செலுத்த வேண்டும். இக் கேள்விக் கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச் சீட்டுக்களைக் காட்டினுலும் போதுமானது.*

*5. இக் கேள்வியைப் பற்றிய மேலதிகமான விபரங்கள் யாவற்றையும், புத்தளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.*

*கே. எம். சுப்பிரமணியம்,*
*நீர்ப்பாசனப் பொறியியலாளர்,*
*புத்தளம் உபபிரிவு.*

*புத்தளம்,*
*1969 ம் ஆண்டு யூலை மாதம் 18 ம் திகதி.*

8–16—1.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,865

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### மாத்தளை உபபிரிவு

மாத்தளை நீர்ப்பாசன உபபிரிவிலுள்ள துன்ன பிந்துன்னவேவா குளத்தின் புனருத்தாரண வேலைகள் செய்வதற்கு நத்தராம்பொத்த குண்டசாலையில் உள்ள மத்திய மாகாண பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பின் உடனே திறக்கப்படும்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூபா 45,000 அதற்கும் மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மட்டுமே இக் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதி உடையவராவர்.

இக் கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் மாத்தளை நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 13.8.69 முதல் 19.8.69 வரை பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன் வருவோர் தங்கள் பதிவுப் பத்திரங்களுடன் தாம் இப்போது திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி அவ்வேலைகளுக்குப் பொறுப்பாக உள்ள அதிகாரிகளிடம் இருந்து வேலைகள் முறையே நடைபெறுகின்றனவா என்று அறிவதற்காகிய பத்திரங்களும் பெற்று அனுப்புதல் வேண்டும். இவ்வேலை இயந்திரங்களின் உதவி கொண்டே செய்ய வேண்டி இருப்பதால் கேள்வியாளர்கள் தம்மிடமுள்ள இயந்திரங்களின் விபரங்களையும் ஒரு பத்திரத்தில் வெளிப்படுத்தல் வேண்டும். இவ்வேலைக்காய இயந்திரங்களைக் கொண்டுள்ள தகுதி வாய்ந்த கேள்வியாளர்களுக்கு மட்டுமே கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

கேள்விக்கட்டணமாக ரூபா 50 யை இதே அலுவலகத்திலோ அல்லது ஏதாவது கச்சேரியிலோ செலுத்திய பற்றுச் சீட்டுடனே இக் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். மேற்கூறிய சங்கங்கள் கேள்விக் கட்டணம் செலுத்தத் தேவைப்படாது.

மேலதிக விபரங்கள் மாத்தளை உபபிரிவு நீர்ப்பாசன அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

க. கனகலிங்கம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
மாத்தளை உபபிரிவு.

நீர்ப்பாசன அலுவலகம்,
மாத்தளை,
22.7.69.

8–97—1.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,865

---

## நீர்ப்பாசன திணைக்களம்

### அனுராதபுர உபபிரிவு

வடமத்திய மாகாணத்தில் அனுராதபுர உபபிரிவின் கீழ் உள்ள வன்னியான் குளத்தில் கனிஷ்ட உத்தியோகத்தருக்கு விடுதி ஒன்று கட்டுவதற்கான கேள்விப்பத்திரங்கள் வடமத்திய பிரிவு பெரும்பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரால் 1969 ம் ஆண்டு ஆவணி மாதம் 22 ம் திகதி காலை 10.00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் பின் உடனே திறக்கப்படும்.

நீர்ப்பாசன திணைக்களத்தில் ரூபா 26,000 க்கு அல்லது அதற்குக்கூடிய தொகைக்கோ பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மட்டுமே இக் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

இக் கேள்விக்காகிய வெற்றுப் பத்திரங்கள் அனுராதபுரம், மகாகந்தராவ, பதவிய, இராசாங்கணை ஆகிய இடங்களிலுள்ள நீர்ப்பாசன கந்தோர்களில் அலுவலக நேரங்களில் 1969 ம் ஆண்டு ஆவணி மாதம் இரண்டாம் திகதியிலிருந்து பதினெட்டாம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகத்துடன் தாம் இப்போது திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் தெரியப்படுத்தி கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன் கேள்விக்கட்டணமாக ரூபா 50 ஐக் கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளும் நீர்ப்பாசன கந்தோரில் செலுத்திப் பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ள வேண்டும். இப்பணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

மேலதிக விபரங்களை அனுராதபுர நீர்ப்பாசன உப பிரிவுக்கந்தோரில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

டபிள்யு. எஸ். சபாரத்தினம்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
அனுராதபுர உபபிரிவு.

நீர்ப்பாசன கந்தோர்,
அனுராதபுரம்,
1969 ம் ஆண்டு ஆடி மாதம் 23 ம் திகதி.

8–95—1.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,865

---

## வவுனியா கச்சேரி

கீழ்க்காணும் கட்டிட வேலைகள் சம்பந்தமாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரால் 1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1 ம் திகதி வெள்ளிக்கிழமை நடுப்பகல் 12 மணி வரைக்கும் தனித்தனியே முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) சுதந்திரபுரத்தில் காணி அபிவிருத்தி மேற்பார்வையாளர் வீடு கட்டுதல்.

(2) சேமமடு (2 ம் பிரிவு) றோட்டு வேலைகள்.

(3) பொதுக்கிணறு கட்டுதல்—இராமர்புளியங்குளம்.

(4) புதுப்பிலவு—ஒட்டுசுட்டான் றோட்டு வேலைகள்.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிடம் பெற்றுக்கொண்ட வெற்றிக் கேள்விப்பத்திரங்களில் (இரு பிரதிகளும்) நிரப்பி அனுப்பி வைத்தல் வேண்டும். இவ்வேலைகள் சம்பந்தமான மேலதிக விபரங்களை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். பெற்றுக் கேள்விப்பத்திரங்கள் 1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ம் திகதி பிற்பகல் 3 மணி வரைக்கும் வழங்கப்படும். அரசாங்க அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்ட கொந்தருத்துக்காரரிடமிருந்தும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் ஆகியவைகளிடமிருந்தும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் பத்திரங்கள் இக்கச்சேரியில் ரூபா 25 (ஒவ்வோர் வேலைகளுக்கும்) கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டு காட்டுபவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். கிராம முன்னேற்றச் சங்கங்களும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் கட்டுப்பணம் செலுத்துவதிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்கள்.

பி. சி. பெரேரா,
வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர்.

வவுனியா கச்சேரி,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 23 ந் உ.

8 143—1.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,865.

---

## காணி ஆணையாளர் திணைக்களம்

### வவுனியா மாவட்டத்தில் சேமமடு பாலம் அமைத்தல்

11.7.69 ம் திகதி வெளியிடப்பட்ட 14,862 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேற்கூறிய வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் பாரமெடுக்கும் முடிவு திகதி 22.8.1969 பிற்பகல் 2.30 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கேள்விப்பத்திரங்கள் 18.8.1969 நண்பகல் 12 மணிவரை கொடுக்கப்படும்.

பீ. சி. பெரேரா,
அரசாங்க அதிபர்,
வவுனியா மாவட்டம்.

வவுனியா கச்சேரி,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 23 ந் உ.

8 162—1.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,865.

## கமத்தொழிற்றிணைக்களம்

### கரடியனாறு கமத்தொழிற் பண்ணைக்கு இரு தெளிகருவிகள் விநியோகித்தல் பாரங்கொடுத்தலுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன

கரடியனாறு (மட்டக்களப்பு மாவட்டம்) கமத்தொழில் பண்ணைக்கு இரு தெளிகருவிகள் விநியோகித்தல், பாரம்கொடுத்தல் சம்பந்தமாக சீல் வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1969.8.22 ஆம் திகதி மு. ப. 10 மணி வரையும் கமத்தொழில் உத்தியோகத்தர் (பண்ணை முகாமையும் ஆக்கமும்) அவர்களால் யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில் ஏற்றுக்கொள்ளப்படும்.

மருந்துத்தூள் விசிறும் கருவிகள் இணைந்த முற்றும் காற்றினால் குளிரப்படுத்தும் இயந்திரத்தினால் இயங்கும் இரு தெளிகருவிகள், இக் கருவிகளின் நிறை ஒவ்வொன்றும் 30 இறுத்தலுக்குக் கூடாமலும் 11 இறுத்தல் மருந்துத் தூளுடன் 2 கலன் தண்ணீர் கொள்ளக்கூடிய கொள்கலன் உடையதாய் அமைதல் வேண்டும். இத் தெளிகருவிகள் மட்ட நிலையில் நிமிடத்திற்கு 1/8 கலன் தொடக்கம் ½ கலன் வரை இயங்கக் கூடியதாகவும் தேவைக்கேற்றவாறு 3 முறைகளில் கட்டுப்படுத்தி இயக்கக்கூடியதாயுமிருத்தல் வேண்டும்.

தெளிகருவிகள் குறைந்தது 10 யாருக்குக் குறையாமல் தெளிக்கக் கூடியதாகவும், தூள்விசிறி குறைந்தது 30 யாருக்கு விசிறக்கூடிய சக்தி உடையதாகவும் இருத்தல் வேண்டும். இக்கருவி இதற்குத் தேவையான நடைமுறை ஆயுதங்களுடனும் அவசியமான உதிரிப்பாகங்களுடனும் கொடுக்கப்படல் வேண்டும்.

மேற்கூறிய பிரமாணங்களுக்கமைய திருப்திகரமான புதிய இரு தெளி கருவிகள் கேள்விக்காரரால் விநியோகித்தல் வேண்டும். தெளிகருவிகள் பண்ணை அதிபரின் திருப்திக்கமைய வேலை செய்யத் தொடங்கியவுடன் பணம் கொடுக்கப்படும். தெளி கருவிகளின் விளக்கங்கள் அடங்கிய பிரதியையும் இணைத்தல் வேண்டும். தெளிகருவிகளுக்கும் உபகரணங் களுக்கும் அறவிடும் தொகையைக் குறிப்பிடவேண்டும்.

கேள்விக்காரருக்கு கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதென அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து 2 மாத காலத்திற்குள் தமது இருப்பில் இருந்து தெளி கருவிகள் விநியோகித்தல் பாரம்கொடுத்தல் நடைபெற்று முடிதல் வேண்டும்.

2. மேற்கூறப்பட்ட நிலையங்களிலும் செய்யும் வேலைகள் சேவை களுக்கு வெவ்வேறான கேள்விப் பத்திரங்கள் தயாரித்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப் பத்திரங்களுக்கும் ரூபா 10 வைப்புப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

3. யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) யால் கொடுக்கப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் கோருதல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திர மும் இரு பிரதிகளில் தயாரித்துக் கையொப்பமிட்டு சீல்போட்ட தபால் உறையுள் வைத்து, கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ) கமத்தொழில் கந்தோர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப் பப்படல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பாவிட்டால் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோருக்கு (ப. மு. ஆ.) கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேரில் சென்று சீல் வைத்த உறைகளை இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்க ளடங்கிய தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில் வேலையின் பெயர்க் குறிப்பு ".

,(சேவையின் பெயரும் நிலையமும் கொடுக்கப்படவேண்டும்.) ஆகியவேலை களுக்கான கேள்விப்பத்திரம் " என்று குறிப்பிட வேண்டும். கேள்விப் பத்திரங்களைத் திறந்து பார்த்தபின் அவை கிடைத்தமை பற்றிய உறுதிப் பத்திரங்கள் ஒவ்வொரு கேள்விக்காரருக்கும் அனுப்பப்படும். கேள்விப் பத்திரம் கோரும் முடிவுத் திகதிக்குப் பின்னர் நான்கு நாட்களுக்குள் உறுதிப்பத்திரம் கிடைக்காத கேள்விக்கரார் யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில், கமத்தொழில் அதிகாரியுடன் (ப. மு. ஆ.) தொடர்பு கொள்ள வேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திற்கும் வைப்புப்பணமாகக் கட்டிப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டைக் கொடுத்து முடிவுத் திகதிக்கு முன்தினம் நண்பகல் 12 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ள முடியும். கேள்விப்பத்திர வைப்புப் பணம் எச்செயலகங்களி லும் அல்லது கமத்தொழில் இலாகா பேராதனையில் செலுத்துதல் வேண்டும். வேலை ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவித்தல் கிடைத்த 10 நாட்களுக்குள் கேள்விக்காரர் வேலை ஒப்பந் தத்தில் கைச்சாத்திடத் தவறின் தனது கேள்விப்பத்திர வைப்புப்பணத்தை இழப்பதுடன் தாமத வேலை செய்யும் கொன்தராத்துக்காரர்களின் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்படுவதுடன் இது சம்பந்தமாக எந்தவிதக் கடிதத் தொடர்பையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மாட்டாது. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பண்ணை முகாமையாளர்களினால் கொடுக்கப்படும் திகதிகளில் வேலைகளை ஆரம்பித்து குறிப்பிட்ட காலத் திற்குள் பூர்த்தியாக்கத் தவறின் ஒப்பந்தத்தில் கூறியவாறு நஷ்டஈடு செலுத்துவதற்கு ஆளாவார்.

5. கேள்விப்பத்திரகாரர் விரும்பின் கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் பிரசன்னமாகலாம். யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோ ரில் (ப. மு. ஆ.) கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். திறக்கப்படும் நேரமும் திகதியும் கேள்விப்பத்திர முடிவுத் திகதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

6. அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் (இரு பிரதிகளில்) அல்லது அதில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையாத விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா தப்படவே. கேள்வித் தொகையும் மொத்தமும் மையினால் தெளிவாக எழுண்டும். கேள்விப்பத்திரங்களில் அழித்து எழுதுதலும் பிழை திருத்தங்களும் கேள்விப்பத்திரக்காரரால் முதலெழுத்துக் கையாப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரக்காரர் தமது பூரணமான பெயர், முகவரி ஆகிய வற்றை பெரிய எழுத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதுடன் கேள்விப்பத்திரத்தின் மொத்தத் தொகையில் 5 வீதத்தை பிணைப்பணமாகக் கமத்தொழில் அதிபரிடம் செலுத்துதல் வேண்டும். இப்பணம் கொந்தராத்து வேலையைச் சரிவரச் செய்து முடித்த பின்னரே திருப்பித்தர முடியும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப் பத்திரக்காரர் வேலையைச் சரிவரச் செய்து முடிக்காவிடின் அவருடைய பிணைப்பணம் அரசாங்கத்தைச் சேருவதுடன் அவருடைய பெயர் கொந்த ராத்துக்காரர்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரரின் பட்டியலில் சேர்க்கப்படும்.

9. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் பொழுது ஒப்பந்தப் பத்திரத்தில் ஒட்டப்படும் முத்திரைக்கான செலவைக் கேள்விப்பத்திரக்காரர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

10. கொந்தராத்துக்காரர் தமது வேலையைத் திருப்திகரமாகச் செய்யா மலோ குறிப்பிட்ட தினத்திற்குள் பூர்த்தியாக்காமல் இருந்தாலோஅவரது கொந்தராத்தை முடிவுறச் செய்யும் அதிகாரம் கமத்தொழில் அதிபருக் குண்டு. இப்படியான சந்தர்ப்பத்தில் கொந்தராத்துக்காரரின் செலவில் அவ்வேலையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வேறுவித ஒழுங்குகள் செய்வதற்கு கமத்தொழில் அதிபர் உரிமையுடையவராவார்.

11. கொந்தராத்துக்காரர் கோரும் கேள்விகள் முழுவதையுமோ சில பகுதிகளையோ அனுமதிக்கவும் நிராகரிக்கவும் அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

12. கேள்விப்பத்திரக்காரர் கேள்விகள் முடிவு திகதியில் இருந்து மூன்று கிழமையை கேள்விப்பத்திரங்கள் பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளும் தினமாக வைத்திருத்தல் வேண்டும்.

13. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் பயிற்றப்பட்ட பயிற்றப் படாத இலங்கையரையே வேலைக்கமர்த்துதல் வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களில் இருந்தே கூலியாட்களை வேலைக்கமர்த் துதல் வேண்டும்.

இந்நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றுக்கு அமையாது வேலை செய்யும் கேள்விப்பத்திரக்காரர் கொந்தராத்து வேலை நிராகரிக்கப்படுவதற்கு ஆளாவார். விசேட சூழ்நிலையில் கமத்தொழில், உணவுற்பத்தி மந்திரி யின் எழுத்துமூல அங்கீகாரத்தைப் பெற்றிருந்தால் மாத்திரமே இலங்கை யரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்த முடியும்.

எழுத்து மூலம் அங்கீகாரம் பெறுது இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்துவது அவரது கொந்தராத்து வேலையை இழப்பதற்கு வழி கோலும்.

" இலங்கையர் " என்னும் பதம் இலங்கையின் வம்சாவழியினரை அல்லது பதிவு செய்யப்பட்ட ஒருவரைக் குறிக்கும்.

அமைய ஊழியர்களின் தற்போதைய அல்லது வருங்காலத்தில் செய் யப்படும் சம்பளசட்ட திட்டங்களுக்கமைய இக்கொந்தராத்தில் வேலை பார்க்கும் கூலியாட்களின் சம்பளங்கள் நிர்ணயிக்கப்படல் வேண்டும். கமத்தொழில் அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட கமத்தொழில் இலாகாவில் வேலைபார்க்கும் ஓர் உத்தியோகத்தர் கொந்தராத்துக்காரரின் வேலை சம்பந்தமான புத்தகங்கள், சம்பளப்பட்டியல், வரவுப்பட்டியல் ஆகிய தஸ்தாவேஜுகளைப் பார்வையிடுவதற்குக் கோரப்படுவர்.

14. எல்லா அறிவித்தல்களும் கேள்விப்பத்திரகாரருக்கு நேரடியாக அல்லது தபால்மூலம் அனுப்பப்பட்டால் அது அவர்களால் ஏற்றுக்கொள் ளப்பட்டதாகக் கருதப்படும்.

15. 1934 ம் ஆண்டு தொழிலாளர் நலவுரிமைச் சட்ட இல. 19 (பகுதி 117) இன்கீழ் தொழிலாளரினால் செய்யப்படும் அரசாங்கத்தைப்

பாதிக்கும் முறைப்பாடுகளுக்கு கொந்தராத்துக்காரரே பொறுப்புடைய வராவார்.

16. விரும்பத்தகாதவரை வேலைக்கமர்த்துவதை எதிர்ப்பதற்கு அரசாங்கத்துக்கு உரிமையுண்டு.

17. குற்றப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தனித்தோ அல்லது கூட்டாகவோ கேள்விப்பத்திரங்கள் கோரின் அவர்களுடன் கமத்தொழில் அதிபர் விரும்பாவிடின் ஒப்பந்தம் செய்து கொள்ள மாட்டார்.

18. மேலும் விவரங்கள் தேவைப்படின் ஒவ்வொரு பண்ணைகளுக் குமுரிய அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பி.ரி. ஜினேந்திரதாச,
பிரதிக் கமத்தொழில் அத்தியட்சகர்,
(க. க. வும் ப.)

பேராதனை,

8-107—1.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,865

---

## பொதுவேலைத் திணைக்களம்

துணுக்காய் பிரிவு காரியாதிகாரி அலுவலகமும் குடிமனையும் கட்டுதலுக்கான கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணம் பொது வேலைத் திணைக்களம் வடபகுதி கண்காணிப்புப் பொறிவலாளர் காரியாலய கேள்விச் சபையின் தலைவரால் 1969 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25 ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. பொது வேலைத் திணைக்கள முல்லைத்தீவு மாவட்ட நிறைவேற்றுப் பொறிவலாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப் பத்திரங்களில், இணைப் படிவமாக கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வேண்டிய இதர விபரங்களை மேற்படி பொறிவலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். குறிக்கப்பட்ட வேலைக்கான நிர்மாண வடிவங்களை அப்பொறிவலாளரின் அலுவலகத்தில் பார்வையிடக்கூடியதாகவிருக்கும்.

3. பொது வேலைத் திணைக்களத்தில் ரூபா 98,000 க்கும் குறையாத கட்டிட நிர்மாணத்திற்கென பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டும், அவர்கள் கேள்விக்கட்டணமாக ரூபா 100 செலுத்திய பற்றுச்சீட்டை 1969 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ந் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 4.30 மணிக்கு முன்னதாக மேலே குறிப்பிட்ட பொறிவலாளரின் பார்வைக்குக் காட்டுவதன் பின்னரே கேள்விப்பத்திரங்களை பெறுவதற்குத் தகுதி பெறுவர்.

குறித்த காலத்திற்குப் பின்னர் கேள்விப்பத்திரங்களை பெறவிரும்புபவர்கள் தாமதமாகும் ஒரு நாளுக்கோ அல்லது ஒரு நாளின் பகுதிக்கோ ரூபா 10 வீதம் மீளளிப்புச் செய்யப்படாத தாமதக் கட்டணத்தை மேலே குறிப்பிட்ட பொறிவலாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெறுவதன் பேரில் கேள்விப்பத்திரங்களை பெறக்கூடியவராவர்.

4. கேள்வியாளராக முன்வரும் ஒவ்வொரு விண்ணப்பகாரரும் கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னதாக தம் ஒப்பந்தகாரப் பதிவுப் புத்தகத்தையோ அல்லது தகுதிகாண் கடிதத்தையோ குறிப்பிட்ட பொறிவலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்களை கோரும் விண்ணப்பகாரர் பற்றுச்சீட்டைக் கொடுக்கும்போது நிறைவேற்றுப் பொறிவலாளரிடமிருந்து தகுந்த பத்திரத்தைப்பெற்று அதில் கைவசமிருக்கும் வேலைகளின் விபரங்களைக் குறிப்பிட்டு அதற்கேற்ற கேள்விச்சபைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

6. கேள்விப்பத்திரங்களுக்குரிய கட்டணத்தை கொழும்பு கோட்டையிலுள்ள பொது வேலைத் திணைக்களத்திலோ தவிர்ந்த இதர இடங்களிலுள்ள கச்சேரிகளிலோ கட்டலாம்.

ச. பத்மநாதன்,
கண்காணிப்பு பொறிவலாளர்,
வடபகுதி.

கண்காணிப்பு பொறிவலாளர் அலுவலகம்,
பொதுவேலைத் திணைக்களம், யாழ்ப்பாணம்,
1969 ம் ஆண்டு யூலை மீ 24 ந் உ.

8-174/1—1.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,865

---

## பொதுவேலைத் திணைக்களம்

வவுனியா மாவட்டத்தில் 80 கியுப்பு ½" அங்குலக் கல் வழங்கி ஒப்புக்கொடுத்தலுக்கான கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணம் பொதுவேலைத் திணைக்களம் வட பகுதி கண்காணிப்புப் பொறிவலாளர் காரியாலய கேள்விச்சபையின் தலைவரால் 1969 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25 ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. பொதுவேலைத் திணைக்கள வவுனியா மாவட்ட நிறைவேற்றுப் பொறிவலாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப் பத்திரங்களில், இணைப் படிவமாக கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வேண்டிய இதர விபரங்களை மேற்படி பொறிவலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விக்கு நோக்கமுள்ள ஒப்பந்தக்காரர்கள் கேள்விக்கட்டணமாக ரூபா 25 செலுத்திய பற்றுச்சீட்டை 1969 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ந் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 4.30 மணிக்கு முன்னதாக மேலே குறிப்பிட்ட பொறிவலாளரின் பார்வைக்குக் காட்டுவதன் பின்னரே கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்குத் தகுதி பெறுவர்.

குறித்த காலத்திற்குப் பின்னர் கேள்விப்பத்திரங்களைப் பெறவிரும்புபவர்கள் தாமதமாகும் ஒரு நாளுக்கோ அல்லது ஒரு நாளின் பகுதிக்கோ ரூபா 10 வீதம் மீளளிப்புச் செய்யப்படாத தாமதக் கட்டணத்தை மேலே குறிப்பிட்ட பொறிவலாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெறுவதன் பேரில் கேள்விப்பத்திரங்களை பெறக்கூடியவராவர்.

4. கேள்விப்பத்திரங்களுக்குரிய கட்டணத்தை கொழும்பு கோட்டையிலுள்ள பொதுவேலைத் திணைக்களத்திலோ தவிர்ந்த இதர இடங்களிலுள்ள கச்சேரிகளிலோ கட்டலாம்.

ச. பத்மநாதன்,
கண்காணிப்பு பொறிவலாளர்,
வட பகுதி.

கண்காணிப்பு பொறிவலாளர் அலுவலகம்,
பொதுவேலைத் திணைக்களம், யாழ்ப்பாணம்,
1969 ம் ஆண்டு யூலை மீ 24 ந் உ.

8-174/2—1.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,865

---

## வித்தியா பகுதி

கீழ்க்காணும் வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் 1969 ம் ஆண்டு ஒகத்து மாதம் 22 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிவரை யாழ்ப்பாண வட பெரும்பாக கல்வித் திணைக்களக் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

| பாடசாலைப் பெயர்கள் | வேலை விபரங்கள் |
|---|---|
| யா/பல்லவி ஆசிரியர் கலாசாலை | படக்காட்சி மண்டப மிகுதிக் கட்டட வேலை. |

மாவட்ட குறுக்கம்

யா=யாழ்ப்பாண மாவட்டம்

குறிப்பு :—பதிவுத்தகைமை.

மேற்கூறிய வேலைக்கு ரூபா 13,500 மும் அதற்கு மேலும்.

2. இவ்வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் குறிப்பில் கொடுக்கப்பட்ட தொகைகளுக்கு கல்வி கலாச்சார அமைச்சில், பொது வேலைப்பகுதியில் அல்லது நீர்ப்பாசன திணைக்களத்தில் பதியப்பட்டவர்களுக்கு 1969 ம் ஆண்டு ஒகத்து மாதம் 21 ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிவரை வடபெரும்பாக கல்வியதிபதி அவர்களால் வழங்கப்படும். (நீர்ப்பாசன திணைக்களத்தில் ரூபா 15,000 க்கும் அதற்கு குறைந்த தொகைக்கும் பதியப்பட்டவர்கள் மேற்படி வேலைகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் அல்லர்) இவ்வேலைகளுக்கு ரூபா 100 கொழும்பு கலாச்சார அமைச்சு அலுவலகத்திலோ அல்லது வடபெரும்பாக கல்வித் திணைக்களத்திலோ அல்லது கொழும்புக்கு வெளியேயுள்ள எக் கச்சேரியிலோ கட்டியதாக பற்றுச்சீட்டு வடபெரும்பாக வித்தியாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். காசோலை, மணியோடர், போஸ்ரலோடர் ஆகியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்விப்பத்திரங்களுக்கான காசு கட்டுவதற்குரிய பத்திரங்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரச் செயலாளரின் அலுவலகத்துப் பாடசாலைகள் கிளையிலிருந்து அல்லது வடபெரும்பாக கல்வியதிபதியின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பில் காண்பிக்கப்பட்டபடி பதியப்பட்டதாக அத்தாட்சி காண்பிப்பவர்களுக்கு மாத்திரமே பணமிடும் பத்திரம் வழங்கப்படும்.

3. நீர்ப்பாசனத் திணைக்களத்தில், பொதுவேலைப்பகுதியில் அல்லது கல்வி அமைச்சில் குறிப்பில் கொடுக்கப்பட்ட தொகைகளுக்கு பதியப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் இவ்வேலைகளுக்கு விண்ணப்பிக்க முடியும்,

அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் இடுபணம் செலுத்துவதிலிருந்து விலக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படுமுன் கொடுக்கப்பட்ட தொகைகளுக்கு பதியப்பட்டதாக அவை அத்தாட்சி காண்பித்து கேள்விப்பத்திர படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

4. 2ம் 3 ம் பந்தியில் குறிப்பிட்டபடி வடபெரும்பாக வித்தியாதிபதியிடமிருந்து பெறக்கூடிய கேள்விப்பத்திரங்கள் இரட்டைப் பிரதிகளில் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அக்கந்தோரிலிருந்து வேண்டிய மாதிரிப்படம் பிறவிபரங்களும் அறியலாம். கேள்விப்பத்திரங்கள் பதிவுசெய்த தபால்மூலம் தலைவர், கேள்விச்சபை, வடபெரும்பாக கல்வித்திணைக்களம், 153, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசமிட்டு அனுப்பப்பட வேண்டும். உள்ளூர் விண்ணப்பகாரர்கள் கேள்விப் பத்திரங்கள் தபாலில் அனுப்ப விரும்பாவிடின் விண்ணப்பகாரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ தம்து கேள்விப்பத்திரங்களை அடையாள முத்திரையிட்டு யாழ்ப்பாண கல்வித்திணைக்கள நிர்வாக உதவியாளரிடம் கொடுத்து பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளல் வேண்டும். மேலுறையில் விண்ணப்பக்காரரின் பெயர் விலாசம் முதலியன குறிப்பிடப்பட வேண்டும்.

5. 1969 ம் ஆண்டு ஒகத்து மாதம் 22 ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணம், 153, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வடபெரும்பாக கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். விண்ணப்பக்காரர்கள் இவ்வேளையில் அங்கு பிரசன்னமாய் இருக்கலாம். அவர்களுக்கு கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்தவர்களின் பெயர்களும் தொகையும் வாசித்து காண்பிக்கப்படும்.

6. கேள்விப்பத்திரங்களை பெறும் திகதி முடிவடைந்தபின் ஆறு வாரங்களுக்கு தமது கேள்வியை அமுலில் வைக்க வேண்டுமென்று கேள்விப்பத்திரம் சமர்ப்பிப்போர் வேண்டப்படுவர்.

7. யாழ்ப்பாண வடபெரும்பாக கல்வித் திணைக்கள பாடசாலை வேலைகள் கிளையில் பரிசீலனைக்கென கேள்விப்பத்திரங்கள் கிடைக்கக் கூடியதா இருக்கும்.

8. இக் கேள்விப்பத்திரங்களுக்கு 30.9.1966 க்கு முன் கல்வித் திணைக்களத்தால் பதியப்பட்ட ஒப்பந்தகாரப் பதிவுகள் கல்வி கலாச்சார அமைச்சினால் பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படும்.

சி. தணிகாசலம்,
கல்வியதிபதி,
வட பெரும்பாகம், யாழ்ப்பாணம்.

கல்வித்திணைக்களம்,
153, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம், 22.7.69

8—85—1.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,865

---

## கிழக்குப் பிராந்தியம்—மட்டக்களப்பு, கல்முனை, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளுக்கு ''கெயர்'' பால், விசுக்கோத்துகளை ஏற்றிக் கொடுத்தல்—1969-70

1969 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1970 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ந் திகதி வரை நடைபெறும் கீழ்க்காணும் சேவைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் (இரட்டைப் பிரதியில்) மட்டக்களப்பு கல்வி அலுவலக கேள்விச் சபைத் தலைவரால் 1969 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 5 ந் திகதி வெள்ளிக்கிழமை மு. ப. 10.00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியின் விநியோக நிலையத்திலிருந்து கீழே குறிப்பிடுவனவற்றில் அடைக்கப்பட்ட விசுக்கோத்துக்களை கிழக்குப் பிராந்தியப் பாடசாலைகளுக்கு ஏற்றிக் கொடுத்தல்.

" இட்டத்தட்ட 20 இரு. விசுக்கோத்துக்களைக் கொண்ட நீள் சதுர " காட்போட் " அட்டைப் பெட்டிகள் ".

**கீழே குறிப்பிடப்பட்ட இடங்களுக்காகத் தனித்தனி கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**மட்டக்களப்பு உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியின் விநியோக நிலையத்திலிருந்து**

| | | |
|---|---|---|
| மட்டக்களப்பு மாவட்டம் .. | (1) | மட்டக்களப்பு வடக்கு, கல்குடா வட்டாரங்கள். |
| | (2) | மட்டக்களப்பு தெற்கு, பட்டிருப்பு வட்டாரங்கள். |
| கல்முனை மாவட்டம் .. | (3) | கல்முனை, நிந்தவூர் வட்டாரங்கள். |
| | (4) | பொத்துவில் வட்டாரம். |
| அம்பாறை மாவட்டம் .. | (5) | அம்பாறை வட்டாரம். |

**திருகோணமலை உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியின் விநியோக நிலையத்திலிருந்து**

| | | |
|---|---|---|
| திருகோணமலை மாவட்டம்.. | (6) | திருகோணமலை வட்டாரங்கள். |
| | (7) | மூதூர் வட்டாரம். |

2. ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் மட்டக்களப்பு கிழக்குப் பிராந்திய கல்விப் பணிப்பாளரிடமிருந்து பெறக்கூடிய மாதிரிப் பத்திரங்களில் விண்ணப்பிக்க வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 1969 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 4 ந் திகதி வியாழக்கிழமை மாலை 4.30 மணி வரையும் விநியோகிக்கப்படும். மட்டக்களப்பு கல்வி அலுவலகத்திலோ அல்லது எந்தக் கச்சேரியிலோ ரூபா 100 கட்டுப் பணமாகக் கட்டிய பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தால்தான் ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப் பத்திரத்திற்காய கட்டுப்பணம் கட்டுவதினின்றி விலக்கப்படும்.

3. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் திகதி, நேரம், கேள்விப் பத்திரதாரருக்குப் பின்னர் அறிவிக்கப்படும். பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விப்பத்திரதாரர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர்.

4. கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படுமுன் விண்ணப்பம் செய்ய விரும்புவோர் மட்டக்களப்பு கிழக்குப் பிராந்திய கல்விப் பணிப்பாளர் திருப்தி கொள்ளும் வகையிற் குறைந்தது 10,000 ரூபா பெறுமதியுள்ள அசைவற்ற ஆதனத்தின் உரிமையாளரென்று அந்த இடத்தின் காரியாதிகாரரிடமிருந்து சமீபத்தில் பெறப்பட்ட ஒரு பெறுமதிக் கடிதமும், தனது பெயரில் பதியப்பட்ட ஒவ்வொரு சேவைக்கும் ஒவ்வொரு லொறியாகுதல் அவருக்கு உண்டென்றும், அவை நடப்பு வருட லைசென்ஸ் கொண்டிருக்கின்றன என்றும் பத்திரங்கள் மூலம் அத்தாட்சிப் படுத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியன மேற்கண்ட சேவைகளுக்கான ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம். எனினும் கேள்விப் பத்திரம் வழங்குமுன் இச்சங்கங்கள் முறையே கூட்டுறவுச் சங்க ஆணையாளர், கிராம அபிவிருத்திச் சங்க அதிபர் அல்லது தொழில் ஆணையாளர் ஆகியவர்களில் உரியவர்களிடமிருந்து இச் சேவைகளைச் செய்வதற்குக் குறிப்பிட்ட ஒரு சங்கம் தகுதியுள்ளது என்றும், ஒரு லொறி சொந்தமாக வைத்துள்ளது என்றும் அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும். லொறியின் பதிவுப் பத்திரமும் நடப்பு வருட லைசென்சும் சமர்ப்பிக்கப் படல் வேண்டும். மேற்கூறப்பட்ட தேவையான விடயங்களைப் பூர்த்தியாக்கத் தவறும் விண்ணப்பதாரருக்கு கேள்விப் பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது.

5. கேள்விப் பத்திரங்களில் ஏதாவது ஒரு பகுதியை ஏற்கவோ அல்லது முற்றாக நிராகரித்து விடவோ கேள்விச் சபைத் தலைவருக்கு உரிமையுண்டு. கேள்விப் பத்திரதாரர்கள் தமது கேள்விகளை கேள்விப் பத்திரங்கள் முடிவடைந்த 6 கிழமைகளுக்குச் செல்லும்படியாக வைத்திருத்தல் வேண்டும்.

6. இது சம்பந்தமான மேலும் விபரங்களுக்கு மட்டக்களப்பு, கிழக்குப் பிராந்திய கல்விப் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கவும்.

கல்வி அலுவலகம், மட்டக்களப்பு,
1969 ம் ௵ ஜூலை ௴ 18 ந் வ.

வெ. சங்கரலிங்கம்,
கல்விப் பணிப்பாளர்.

8–187—1.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,865

---

## மதுவரிப் பகுதி

### வவுனியாவிலுள்ள சாராய குதத்திற்கும் புகையிரதப் பகுதிப் பண்டக சாலைக்குமிடையே சாராயமும் மற்றும் பொருட்களும் ஏற்றிச் செல்வதற்கு கேள்விப்பத்திரங்கள், 1969/1970

1969 ம் ஆண்டு ஐப்பசி 1 ம் திகதி தொடக்கம் 1970 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ந் திகதி வரைக்குமுள்ள காலத்துக்கு வவுனியாவிலுள்ள சாராயக் குதத்திற்கும் புகையிரதப் பண்டகசாலைக்குமிடையே சாராயமும் மற்றும் பொருட்களும் ஏற்றிச் செல்வதற்குரிய கேள்விப்பத்திரங்களை 1969 ம் ஆண்டு ஆவணி மாதம் 23 ந் திகதி முற்பகல் 11 மணிவரை யாழ்ப்பாணம் வடபகுதி உதவி மதுவரி ஆணையாளர் ஏற்றுக்கொள்வார்.

2. ஓர் கச்சேரியில் இதற்கென ரூபா 10 செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டைக் காட்டி மேற்படி உதவி மதுவரி ஆணையாளரிடம் பெறக்கூடிய கேள்விப்பத்திரங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டும். 1969 ம் ஆண்டு ஆவணி மாதம் 21 ந் திகதி பிற்பகல் 12 மணிக்குப்பின் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

3. இவ்விடயத்தைப்பற்றிய வேறு விபரங்களைக் குறித்த உதவி மதுவரி ஆணையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மதுவரி ஆணையாளரின் திணைக்களம்,
கொழும்பு 7,
1969 ம் ௵ ஆடி ௴ 20 ந் வ.
எல்பீ/ரி/436.

எம். பி. திசாநாயக்க,
மதுவரி ஆணையாளர்.

8–87—1.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,865

## விவசாய இலாகா

பூநகரி விவசாய விசாலிப்பு நிலையத்தில் கிணறு தோண்டுதலும், 1" "கைப் பம்பு" அமைத்து தண்ணீர் விநியோகம் செய்வதற்கான கேள்விப்பத்திரம்.

கீழ்க்காணும் வேலைகளுக்கான மெழுகு வைக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாண மாவட்ட விவசாய விசாலிப்பு உத்தியோகத்தரால் 15.8.1969 மாலை 2.30 மணி வரையில் ஏற்றுக்கொள்ளப்படும் :—

(1) 6 அடி விட்டமும் 25 அடி ஆழமும் கொண்ட கிணறு தோண்டுதலும் கட்டுதலும்.

(2) உபகரணங்களுடன் கூடிய 1" செமி ரொட்டறி கைப் பம்பு விநியோகித்தலும் அமைத்தலும்.

(அ) யாழ்ப்பாண மாவட்ட விவசாய விசாலிப்பு உத்தியோகத்தர் அன்றேல் அவரின் பிரதிநிதி ஒருவரால் கிணறு அமைப்பதற்கான இடம் காண்பிக்கப்படும். தோண்டப்படும் மண்ணையும் மற்றும் இதர பொருட்களையும் பின்னர் நிரப்புவதற்காக வெட்டப்படும் கிணற்றுக்கு அருகாமையில் குவிக்கப்படல் வேண்டும். கிணற்றின் உட்பக்கச் சுவர்க்கட்டு கற்பாறை மட்டத்திலிருந்து 5" கனமுள்ள சீமெந்துக் கற்களால் (1.3.6) கட்டப்படுவதுடன், உட்பக்கம் சீமெந்துக் கலவையினால் (1.3) பூசப்படுதலும் வேண்டும். தரை மட்டத்திலிருந்து 1 அடி உயரத்தில் பாதுகாப்புச் சுவர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) கைப் பம்பு பாவனையிலுள்ள வகையைச் சேர்ந்த ஒன்றாய் இருக்க வேண்டியதுடன் வடிகட்டி அடி "வால்வ்", உறிஞ்சு குழாய், கட்டடத்தின் மேலே அமைந்துள்ள தொட்டிக்கு தொடர்பு படுத்தவும் விநியோகத்துக்கும் குழாய், முதலில் தண்ணீர் இட்டு பம்பைச் செயல்படுத்துவதற்கான ஒழுங்குகளுடன் பூரணம் பெற்று இருக்கவேண்டும்.

(இ) சகல பொருட்களும் ஒப்பந்தகாரராலேயே தருவிக்கப்படல் வேண்டும்.

(ஈ) ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட நாளிலிருந்து 8 வாரத்திற்குள் வேலைகள் பூர்த்தியடைதல் வேண்டும்.

2. யாழ்ப்பாண மாவட்ட விவசாய விசாலிப்பு உத்தியோகத்தரிடமிருந்து பெறப்படும் படிவங்களிலேயே கேள்விப் பத்திரங்கள் பூர்த்தி செய்தல் வேண்டும். கையெழுத்திடப்பட்ட இரண்டு கேள்விப்பத்திரப் பிரதிகளை உறைகளில் இட்டு மெழுகு வைத்து, யாழ்ப்பாண மாவட்ட விவசாய விசாலிப்பு உத்தியோகத்தர் என முகவரியிட்டு, தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "கிணறு தோண்டுவதற்கான கேள்விப் பத்திரம்" என எழுதப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.

3. ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திற்கும் ரூபா 10/- வைப்புப் பணம் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டைக் கொடுத்து, முடிவுத் திகதிக்கு முதல்நாள் 12.00 மணிக்கிடையில் யாழ்ப்பாண மாவட்ட விவசாய விசாலிப்பு உத்தியோகத்தரிடமிருந்து கேள்விப் பத்திரத்திற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திர வைப்புப் பணம் எந்தச் செயலகத்திலேனும் அல்லது விவசாய இலாகா, போதனையிலேனும் செலுத்துதல் வேண்டும். வேலை ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வைப்புப் பணம் திருப்பிப் பெற முடியும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப் பத்திரகாரர் கோரப்படும் பிணைப் பணத்தைக் கட்டத் தவறுமிடத்தும், கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவித்தல் கிடைத்த 10 நாட்களுக்குள் கேள்விப்பத்திரகாரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறுமிடத்தும் தனது கேள்விப்பத்திர வைப்புப் பணத்தை இழப்பதுடன், தாமத வேலை செய்யும் ஒப்பந்தகாரர்களின் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்படுவதற்கும் ஆளாவர். அரசாங்கத்திற்கு அவரிடமிருந்து அறவிடப்படவேண்டிய வேறு கணக்கு உண்டாயின் அந்த அறவிடுதலைச் செய்வதற்கு இது தடையாகக் கணிக்கப்படமாட்டாது.

4. பதிவுத் தபால் மூலமே கேள்விப் பத்திரங்கள் அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பத் தவறும் கேள்விப் பத்திரகாரர் அல்லது பிரதிநிதிகள் தங்களது கேள்விப்பத்திரங்களை மெழுகு வைக்கப்பட்ட உறைகளில் இட்டு உறையின் முற்பகுதியில் "கிணறு தோண்டுவதற்கான கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பதுடன் கேள்விப் பத்திரகாரரின் பெயர், முகவரி முதலியனவும் எழுதப்பட்டு, யாழ்ப்பாண மாவட்ட விவசாய விசாலிப்பு உத்தியோகத்தரின் அலுவலகத்திலுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் சேர்க்க வேண்டும்.

5. பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்ட கேள்விப் பத்திரம் கிடைத்ததற்கான பதில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் தினத்தன்று எல்லாக் கேள்விப் பத்திரகாரர்கட்கும் அனுப்பி வைக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் கோரும் முடிவு திகதியிலிருந்து நான்கு தினங்களுக்குள் கேள்விப் பத்திரம் பெற்றுக்கொண்டதற்கான பதில் கிடைக்காவிடில் உடனடியாக யாழ்ப்பாண மாவட்ட விவசாய விசாலிப்பு உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளவும்.

கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் சமுகமளிக்க கேள்விப் பத்திரகாரர் விரும்பும் பட்சத்தில் அனுமதிக்கப்படுவர். கேள்விப் பத்திரங்கள் கோரும் மேற்குறிப்பிட்ட முடிவு திகதியிலும் நேரத்திலும் யாழ்ப்பாண மாவட்ட விவசாய விசாலிப்பு உத்தியோகத்தரின் அலுவலகத்தில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்.

6. அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் (இரு பிரதிகளில்) அல்லது அதில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையாத விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்வித் தொகையும் மொத்தமும் மையினால் தெளிவாக எழுதப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்களில் அழித்து எழுதலும் பிழை திருத்தங்களும் கேள்விப் பத்திரகாரரால் முதல் எழுத்துக்கள் இடப்பட்டிருக்கவேண்டும்.

7. கேள்விப் பத்திரக்காரர் தமது பூரணமான பெயர்களையும் விலாசங்களையும் பெரிய எழுத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதுடன் கேள்விப் பத்திரத்தின் மொத்தத் தொகையில் ஐந்து வீதத்தைக் குறிப்பிட்ட தவணைக்குள் வேலையை முடிப்பதற்குப் பிணைப்பணமாக கமத்தொழில் அதிபரிடம் செலுத்துதல்வேண்டும். இப்பணம் கொந்தராத்து வேலையைச் சரிவரச் செய்துமுடித்த பின்னரே திருப்பித் தர முடியும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் வேலையைச் சரிவரச் செய்து முடிக்காவிடின் அவருடைய பிணைப் பணம் அரசாங்கத்தைச் சேருவதுடன் அவருடைய பெயர் கொந்தராத்துக்காரரின் பெயர்ப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரரின் பட்டியலில் சேர்க்கப்படும்.

9. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்பொழுது ஒப்பந்தப் பத்திரத்தில் ஒட்டப்படும் முத்திரைக்கான செலவைக் கேள்விப் பத்திரகாரர் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

10. கேள்விப்பத்திரக்காரர் கேள்விகள் முடிவுத் திகதியிலிருந்து 3 கிழமைகளை கேள்விப்பத்திரங்கள் பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ளும் தினமாக வைத்திருத்தல் வேண்டும்.

11. கமத்தொழில் அதிபருக்கு எந்தக் கேள்விப்பத்திரங்களையும் அங்கீகரிக்கவோ அல்லது நிராகரிக்கவோ உரிமையுண்டு.

12. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் பயிற்றப்பட்ட/பயிற்றப்படாத இலங்கையரையே வேலைக்கமர்த்தல் வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களிலிருந்து கூலியாட்களை வேலைக்கமர்த்துதல் வேண்டும்.

இந்நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றுக்கு அமையாது வேலை செய்யும் கேள்விப்பத்திரக்காரர், கொந்தராத்து வேலை நிரா கரிக்கப்படுவதற்கு ஆளாவர். விசேட சூழ்நிலையில் கமத் தொழில் உணவுற்பத்தி நிரந்தரச் செயலாளரின் எழுத்துமூல அங்கீகாரத்தைப் பெற்றிருந்தால் மாத்திரமே இலங்கையரல் லாத ஒருவரை வேலைக்கமர்த்த முடியும்.

எழுத்து மூலம் அங்கீகாரம் பெறாது இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்துவது அவரது கொந்தராத்து வேலையை இழப்பதற்கு வழிகோலும்.

"இலங்கையர்" என்னும் பதம் இலங்கையின் வம்சாவழி யினரை அல்லது பதிவு செய்யப்பட்ட ஒருவரையே குறிக் கும்.

அமைய ஊழியர்களின் தற்போதைய அல்லது வருங் காலத்தில் செய்யப்படும் சம்பளச் சட்டதிட்டங்களுக்கமைய இக்கொந்தராத்தில் வேலைபார்க்கும் கூலியாட்களின் சம்ப ளங்கள் நிர்ணயிக்கப்படல் வேண்டும். கமத்தொழில் அதிபரி னால் அதிகாரமளிக்கப்பட்ட கமத்தொழில் இலாகாவில் வேலை பார்க்கும் ஓர் உத்தியோகத்தர் கொந்தராத்துக்காரரின் வேலை சம்பந்தமான புத்தகங்கள், சம்பளப்பட்டியல், வரவுப் பட்டியல் ஆகிய தஸ்தாவேசுகளைப் பார்வையிடுவதற்குக் கோரப்படுவர்.

*13.* எல்லா அறிவித்தல்களும் கேள்விப்பத்திரக்காரர்கட்கு நேரடியாக அல்லது தபால் மூலம் அனுப்பப்பட்டால் அது அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது எனக் கருதப்படும்.

*14.* விரும்பத் தகாதவரை வேலைக்கமர்த்துவதை எதிர்ப்ப தற்கு அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

*15.* 1934 ம் ஆண்டு தொழிலாளர் நலவுரிமைச் சட்ட இல. 19 (பகுதி 117) இன் கீழ் தொழிலாளரினால் செய்யப்படும் அரசாங்கத்தைப் பாதிக்கும் முறைப்பாடுகளுக்கு கொந்த ராத்துக்காரரே பொறுப்புடையராவார்.

*16.* தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் சேர்க்கப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தனித்தோ அல்லது கூட்டாகவோ கேள்விப் பத்திரங்கள் கோரின் அவர்களுடன் கமத்தொழில் அதிபர் விரும்பாவிடின் ஒப்பந்தம் செய்துகொள்ளமாட்டார்.

*17.* மேலும், விபரங்கள் தேவைப்படின் யாழ்ப்பாண மாவட்ட விவசாய விசாலிப்பு உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பொ. மாணிக்கவாசகர்,
மாவட்ட விவசாய விசாலிப்பு உத்தியோகத்தர்,
யாழ்ப்பாணம்.

மாவட்ட விவசாய விசாலிப்பு கந்தோர்,
அரசாங்க செயலகம்,
யாழ்ப்பாணம்.
17 ஜூலை 1969.

8–1—1.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,865

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### மின்சக்தியால் இயங்கும் இரண்டு நீர்ப் பம்பிகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்

மணிக்கு 5,000 கலன்கள் வீதம் இறைக்கக்கூடிய மின்சக்தியால் இயங்கும் இரண்டு நீர்ப் பம்பிகள் வழங்குவதற்குரிய கேள்விப்பத்திரங்களைக் காணி அபிவிருத்தி அதிபர் 1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ந் திகதி முற்பகல் 11 மணிவரை ஏற்றுக்கொள்வார்.

2. கேள்விக்காரர் பின்வருவனவற்றை வழங்குவதற்காகக் குறிக்க லாம்:—

(அ) முன்னைய இருப்பும், இருலப்பனை மத்திய வேலைத்தலத்தில் வழங்கப்பட்டமையும்,

(ஆ) இறக்குமதி செய்து இருலப்பனை மத்திய வேலைத்தலத்தில் விநி யோகிக்கப்பட்டவையும், கேள்விக்காரர் முந்திய விநியோகக் காலத்தைக் குறிப்பிடலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 25 கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ம் இலக்கக் கணக்கில் வரவு வைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவதொரு கச்சேரியிலோ செலுத்தி 1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ந் திகதி நண்பகல் 12 மணி வரை அதற்குரிய பற்றுச் சீட்டைக் கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப்பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப்பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிப் பிட்ட திகதியும் நேரமும் முடிவடையும் முன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் "மின்சக்தியால் இயங்கும் நீர்ப்பம்பிகள் 2 வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்" எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்கத்தக் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விக் பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத் தபாலிலும் அல்லது கேள்விப் காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலம் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டி யிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும், மாற்றமுடியாதவை யுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மீளப் பெற்றுக் கொள்ளக்கூடாது.

7. கேள்விக்காரர் விநியோகம் சம்பந்தமான முழு விபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக் கொண்ட விபரங்களில் ஏதாவது மாற்ற மிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக் காட்ட வேண்டும்.

8. தேர்வு பெற்ற கேள்விக்காரர் விநியோகத்தில் தவறிழைப்பின் அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அர சாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெற முடியாது தவறிய ஒப்பந்தகாரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ந் திகதி முற்பகல் 11 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமூகமளிக்கலாம்.

10. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றை யேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

11. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் காணி அபிவிருத்தித் திணைக்கள மேற்பார்வைப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ள லாம்.

பொ. இரத்தினசிங்கம்
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு ஜூலை மாதம் 24 ந் திகதி.
சீர்/2/383

8–189—1.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,685

## மதுவரித் திணைக்களம்

### சாராயமும் மற்றும் பொருட்களும் ஏற்றிச்செல்வதற்குக் கேள்விப்பத்திரங்கள்—1969–70

1969 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1970 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ந் திகதிவரைக்குமுள்ள ஒருவருட காலத்திற்கு கீழ்க்காணும் ஒவ்வொரு இடங்களுக்குமிடையே சாராயமும் மற்றும் பொருட்களும் ஏற்றிச் செல்வதற்கு மதுவரித் திணைக்களம், ரொறிங்டன் சதுக்கம், கொழும்பு 7 லுள்ள கேள்விப் பத்திரச் சபைத் தலைவரால் 1969 ம் ஆண்டு ஆவணி மாதம் 23 ந் திகதி முற்பகல் 11 மணி வரைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) பதுளையிலுள்ள சாராயக் குதத்திற்கும் புகையிரத பண்டசாலைக்குமிடையே.

(ஆ) மட்டக்களப்பிலுள்ள சாராயக் குதத்திற்கும் புகையிரத பண்டசாலைக்குமிடையே.

(இ) யாழ்ப்பாணத்திலுள்ள சாராயக் குதத்திற்கும் புகையிரத பண்டசாலைக்குமிடையே.

(ஈ) கண்டியிலுள்ள சாராயக் குதத்திற்கும் (புதிய மனை) புகையிரத பண்டசாலைக்குமிடையே.

(உ) திருகோணமலையிலுள்ள சாராயக் குதத்திற்கும், புகயிரத பண்டசாலைக்குமிடையே.

மதுவரி ஆணையாளரிடமிருந்து விண்ணப்பித்துப் பெறப்படும் கேள்விப் பத்திரங்களிலேயே சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விடயத்தையிட்ட சகல விபரங்களையும் மதுவரி ஆணையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். 1969 ம் ஆண்டு ஆவணி மாதம் 21 ந் திகதி நண்பகல் 12 மணிக்குப்பின் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

எம். பி. திசாநாயக்க,
மதுவரி ஆணையாளர்.

மதுவரி ஆணையாளர் திணைக்களம்,
கொழும்பு 7,
1969 ம் ஆண்டு ஆடி மீ 20 ந் உ.
எல்பி/ரி/436.

8–88—1.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,865

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## கமத்தொழிற்றிணைக்களம்

**மேலதிகமாக இருக்கும் கன்றுக்குட்டிகளை ஏல விற்பனை செய்தல்**

1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ம் திகதி மு. ப. 10.00 மணியளவில் யாழ்ப்பாணம் தின்னவேலி பண்ணைப் பாடசாலையில் கீழ்க்காணப்படும் கன்றுக்குட்டிகளை ஏலத்தில் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாடுகளை வாங்க விரும்புவோர் விற்பனைத் தினத்திற்கு முன் வேலை நேரத்தில் பண்ணைப் பாடசாலை அதிபரைச் சந்தித்து அவற்றைப் பார்வையிடுவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்து கொள்ளலாம்.

மாடுகளை விலைக்கு வாங்கியபின் அவற்றின் பெறுமதியை ஒரே முறையில் செலுத்திவிட்டு அத்தினத்திலேயே பண்ணையில் இருந்து மிருகங்களை வெளிக்கொண்டு செல்லல் வேண்டும்.

| எண் | இனம் | பிறந்த திகதி |
|---|---|---|
| ஆர். 345 .. | சிந்திக்கலப்பு ஜேர்ஸி .. | 17. 8.66 |
| ஆர். 347 .. | கலப்பு .. | 11. 9.66 |
| ஆர். 352 .. | கலப்பு ஜேர்ஸி .. | 17.11.66 |
| ஆர். 360 .. | கலப்பு .. | 1. 6.67 |
| ஆர். 363 .. | கலப்பு .. | 19. 6.67 |
| ஆர். 371 .. | கலப்பு .. | 2.11.67 |
| ஆர். 375 .. | கலப்பு .. | 6.12.67 |
| ஆர். 377 .. | கலப்பு .. | 4. 3.68 |

பி. ரி. ஜினேந்திரதாச,
பிரதிக் கமத்தொழில் அத்தியட்சகர் (க.க.வும் ப.)
பேராதனை.

8–106—1.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,865

---

## பொலிஸ் இலாகா

### பழைய பொருட்கள் விற்பனவு

7–275—11.7.69 ந் திகதி வர்த்தமானி இல. 14,862 ல் வந்த பொருட்களின் விபரம் பின்வருமாறு:—

14 காக்கி கோட்டுகள்
1 ரைவர் தொப்பி
15 பிறஸ்கள்
12 குண்டாந்தடிகள்
47 பூட்ஸ்
14 பட்டிகள்
14 பட்டிஉறைகள்
1 கரம்பலகை
10 ரபர்சப்பாத்துகள்
1 டைனமோ லாம்பு
15 பொலிஸ் கம்பளம்
46 மெத்தைகள்
31 கம்பளிப்பட்டிகள்
1 தோள்ஈட்டிஉறை
1 பெட்ரோல் லாம்பு
7 கருப்பு மழைக்கோட்டுகள்
22 ரப்பர் மழைக்கோட்டுகள்
2 மழைகோட்டு பட்டிகள்
2 ராக்கைகள்
112 பொலிஸ் தொப்பிகள்
46 காக்கி காற்சட்டைகள்
211 தோற் சப்பாத்துக்கள்
12 சோடி கால்மேசுகள்
24 காக்கி கோட்டுகள்
7 நான்கு கலன் தகரங்கள்
27 ஒரு–கலன் தகரங்கள்
1 டைப் அடிக்கும் கருவி
29 கைப்பந்துகள்
1 கைப்பந்துவலை
2 புஸ்கோட்டுகள்
9 விசேஷ குண்டாந்தடிகள்
1 பைசிக்கல் மணி
1 தொப்பி (கருப்பு)
1 தோற்பை
1 தோற்கூடு
1 தோற்பட்டி
3 மெழுகு திரி லாம்புகள்
1 தேசியகொடி
3 ஒலிபெருக்கும் குழாய்கள்
2 பித்தளை பூட்டுகள்
1 கத்தரிக்கோல்
1 டோர்ச்லைற்
5 கோணக்ஸ்
3 படம்பிடிக்கும் ரோல்கள்

எஸ். ஜீ. டி. சி. எல். எஸ். கேறத்,
பொலிஸ் சுப்பிரின்ரெண்டன்,
வட மத்தியபகுதி,
அனுராதபுரம்.

8–84—1.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,865

# ஆய விற்பனையும், குத்தகை விற்பனையும்

## பிறதேசக் குடிவகைத் தவறணைக் குத்தகை மறுவிற்பனை 1969/70

### மன்னார் மாவட்டம்

மேற்குறிப்பிட்ட தவறணையில் பிறதேசக் குடிவகை 1969 ம் ஆண்டு ஒக்ரோபர் 1 ம் திகதி தொடக்கம் 1970 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ம் திகதி வரைக்கும் விற்கும் சிறப்புரிமை வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் இத்தால் கோரப்படுகின்றன. இச்சிறப்புரிமை கீழ்ச் சொல்லப்பட்ட விதிகளுக்கமைய வழங்கப்படும்.

(அ) 1969/70 ம் குத்தகை வருடத்திற்கும் அதற்குப் பின்வரும் காலங்களுக்குமுரிய பிறதேசக் குடிவகைத் தவறணைக் குத்தகை விதிகள், இவ்விதிகளை 20.6.69 ம் திகதிய அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

(ஆ) தற்போது நடைமுறையிலிருக்கும் எல்லாக் கலால் உத்தரவுப் பத்திரங்களுக்கும் பொருந்தக்கூடிய நிபந்தனைகள்.

2. ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் குறிக்கப்பட்ட பத்திரத்திலும் வைப்புப்பணம் ரூபா 750 க்கான கச்சேரிப் பற்றுச்சீட்டுடனும் இருத்தல் வேண்டும்.

3. எந்தப் பகுதியில் காணி இருக்கிறதோ அந்தப் பகுதி காரியாதி காரியிடமிருந்து பெற்ற பெறுமதிக்குரிய அத்தாட்சிப் பத்திரத்துடன் கேள்விப் பத்திரம் அணைக்கப்பட வேண்டும்.

4. பெறுமதிக்குரிய அத்தாட்சிப் பத்திரத்தில் சொல்லப்பட்ட காணியின் பெறுமதி கேள்விப் பத்திரத்தில் குறிக்கப்பட்ட தொகையின் 25 சத வீதத்திற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

5. கேள்விக்காரர்கள் தாம் சொந்தப் பெயரில் மட்டுமே கேள்விப் பத்திரங்கள் அனுப்பலாம். பிரதிநிதி மூலமோ அன்றேல் இலங்கையரல்லாத ஒருவர் மூலமோ அல்லது மேற்சொல்லப்பட்ட விற்பனை விதிகள் 6 ம் இலக்கத்தின் கீழ் தகுதியற்றவர்களெனச் சொல்லப்பட்டிருக்கும் எவர் மூலமோ அனுப்பப்படும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

6. கேள்விப்பத்திரங்கள் ஒவ்வொன்றும் கவரிலிட்டு, கவரின் இடது புற மேற்பக்கத்தில் " பிறதேசக் குடிவகைத் தவறணை, மன்னார்—1969/70 " என எழுதப்பட்டு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு 6.8.69 காலை 10 மணிக்கு முன்னதாக வந்து சேர வேண்டும். கேள்விப்பத்திரங்கள் பெறும் காலம் 6.8.69 காலை 10 மணிக்கு முடிவடையும். கேள்விக்காரர்கள் அனைவரும் கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கச்சேரியில் இருத்தல் வேண்டும்.

7. சித்திபெற்ற கேள்விக்காரர் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார் என அறிவிக்கப்பட்டதும், விற்பனை விதிகளில் கைச்சாத்திடவும், அரசாங்க அதிபரால் நிர்ணயிக்கப்படும் தொகையைப் பிணைப்பணமாகக் கட்டவும் வேண்டும்.

8. சித்திபெற்ற கேள்விக்காரர், விற்பனை விதிகளில் கைச்சாத்திடவும், பிணைப்பணம் கட்டவும் தவறினால், அவரால் கட்டப்பட்ட வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதோடு கலால் உத்தரவுப் பத்திரம் ஏதேனும் பெறுவதற்குத் தகுதியற்றவராக அவரது பெயர் குற்றப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படும். மேற்சொல்லப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு அமைய, கேள்விக்காரர்களது வைப்புப்பணம், விற்பனை விதிகளிற் சித்திபெற்றவர் கைச்சாத்திட்டுப் பிணைப்பணம் கட்டிய பின்னர் திருப்பிக் கொடுக்கப்படும்.

9. ஏதாவதொரு கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லாக் கேள்விப் பத்திரங்களையோ நிராகரிக்க மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு மாத்திரமே உரிமையுண்டு.

10. அங்கீகாரம் பெற்ற பிறதேசக் குடிவகைத் தவறணையின் விபரங்கள் பின்வருமாறு :—

| தொடர் இல. | பகுதி | தவறணைஇருக்க வேண்டிய இடம் | திறக்கும் நேரம் | மூடும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 .. | மன்னார் பட்டினம் | மன்னார் பட்டின சபை எல்லைக்குள் | காலை 8.00 மணி | இரவு 7.30 மணி |

11. தற்போது தவறணை இருக்கும் இடத்தில் தவறணையை அரசாங்க அதிபரின் அனுமதியுடன் அமைக்க வேண்டும்.

12. இதையிட்டு மேலும் விபரங்கள் அறிய வேண்டுமாயின் அரசாங்க அதிபருக்கு மனுப்பண்ணிப் பெற்றுக் கொள்ளலாம்.

ச. கதிர்காமநாதன்,
மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்.

மன்னார்க் கச்சேரி,
1969 ம் ஆண்டு ஆடி மீ 23 ந் உ.

8—183—1.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,865

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்**

**1.12.1968** தொடங்கி அமுலுக்கு வந்தது

## "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)"

**வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் மற்றும் நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணிவரையும் காரியாலய நேரமாகும்.

4. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக** ரைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படுதல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிரீம் கோட் புறொக்நறுல் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம்** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் | | வெளியூர் | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 | 00 | 60 | 00 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. | 36 | 00 | 42 | 00 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 | 50 | 51 | 50 |

**ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.**

| **தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்** | விலை | | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|---|
| | ரூ. | ச. | சதம் |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 | 50 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 | 00 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 30 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 60 | 15 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர்,** அரசாங்க **பிரசுர நிலையம், தபாற் பெட்டி 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.

அட்டவணை — 1969

| மாதம் | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஓகத்து | 1.8.69 | வெள்ளி | .. | 25.7.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 8.8.69 | வெள்ளி | .. | 1.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 15.8.69 | வெள்ளி | .. | 8.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 22.8.69 | வெள்ளி | .. | 15.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 29.8.69 | வெள்ளி | .. | 22.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| செத்தெம்பர் .. | 5.8.69 | வெள்ளி | .. | 29.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.9.69 | வெள்ளி | .. | 5.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 19.9.69 | வெள்ளி | .. | 12.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 26.9.69 | வெள்ளி | .. | 19.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| ஒற்ரோபர் .. | 2.10.69 | வியாழன் | .. | 26.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 9.10.69 | வியாழன் | .. | 2.10.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 17.10.69 | வெள்ளி | .. | 9.10.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 24.10.69 | வெள்ளி | .. | 17.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 31.10.69 | வெள்ளி | .. | 24.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| நவெம்பர் . | 7.11.69 | வெள்ளி | .. | 31.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 14.11.69 | வெள்ளி | .. | 6.11.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 21.11.69 | வெள்ளி | .. | 14.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 28.11.69 | வெள்ளி | .. | 21.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| திசம்பர் . | 5.12.69 | வெள்ளி | .. | 28.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.12.69 | வெள்ளி | .. | 4.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 19.12.69 | வெள்ளி | .. | 12.12.69 | வெள்ளி | பி.ப | 3.30 |
| | 26.12.69 | வெள்ளி | .. | 18.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு யூன் மீ 13 ந் உ

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
பதில் அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.